

# ரமணோதயம்

அக்டோபர் 2015

காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்

விலை ₹ 20

"தருணம் இது அன்றோ உன்
கருணை நோக்கவே
காலஹரணம் ஆக்கிடில்
ஹா ... ஹா ... ஹா ... என் செய்வேன்
துன்பை நீக்கி, இன்பை அளிக்க என் அன்பா

இன்னம் பாரா முகம் என்னால்
தாளாதையா ஸ்ரீவேதியா! சரணாகதி"

- மணவாசி ராமசாமி ஐயர்


FOR SALE




- 5 MINUTES DRIVE TO SIRUSERI IT PARK
- BEHIND KOHINOOR ASIANA HOTEL
- TWO BED ROOMS TWO TOILETS WITH WELL WATER AND METRO WATER
- EACH FLAT WITH A COVERED CAR PARK
- JUST 100 METRE FROM MAIN OMR YET VERY QUITE AREA

Corner Plot

Contact

Mobile: 9940418375

Email: ramvee11@gmail.com

உதயம் 15 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2015

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2015


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம் | கௌதமன் | 20 |
| 3 | குருவின் அருள் | நொச்சூர் வெங்கட்ராமன் | 28 |
| 4 | ரிபுகீதை | தியாகராஜன் | 29 |
| 5 | பிரம்ம ஞானிகள் | எஸ். கோவிந் சுவாமிநாதன் | 34 |
| 6 | ரமணோதயம் காப்பு நிதி நன்கொடையாளர்கள் | | 36 |
| 7 | ரமண வழி வெண்பாக்கள் | க்ரேஸி மோகன் | 37 |
| 8 | மரணம் மதுரம் | சு. பரமேஸ்வரன், கோவை | 43 |
| 9 | ஜெகதீச சாஸ்திரிகளின் சரணாகதி ஸ்தோத்ரம் | | 50 |
| 10 | இனிவரும் திருநாட்கள்... | | 51 |
| 11 | அக்ஷர மண மாலை - ஒரு தத்துவக் கருவூலம் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 52 |
| 12 | ரிக்வேதத்தில் கலைமகள் துதி | சேலம் சேதுகுமரன் | 62 |
| 13 | அமெரிக்காவில் ஓர் ஆன்மீக அன்னை | | 66 |
| 14 | திருமதி. வேதாம்பாள் நாராயணன் | | 71 |
| 15 | செய்திகள் | | 76 |

# ஆசிரியர் உரை

## அப்பினில் கரையும் உப்பு

பகவான் நமக்கு வழிகாட்டிய ப்ரஸ்தானத்திரய நூல்களாகிய உபதேச உந்தியார், உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷரமணமாலை ஆகிய மூன்று நூல்களுக்குள், கற்போர் மனமாசினை அழித்து, அம்மனத்தையும் உருக்கும் பேரருட்காவியம் அக்ஷரமணமாலை. உலகம் முழுதிலும் இடையூறின்றி எங்கும் பரவியுள்ள கடவுளின் அன்பே அருள் என்று அழைக்கப்படுகிறது. அக்ஷரமணமாலையின் கண்ணிகளில் அருள் என்னும் சொல் 45 இடங்களில் உள்ளது. அருளாலேயே உலகம் தோற்றுவிக்கப் படுகிறது. அருளாலேயே அது நடத்தப் படுகிறது. அருளிலேயே அது ஒடுங்குகிறது. அது எங்ஙனம் பரவி இருந்தாலும் அதனை உள்ளபடி பயன்படுத்துபவரே ஆத்ம அனுபவத்தை அடைகின்றனர். கப்பல் கடலில் செல்லும்போது, காற்று வீச, அதனால் உந்தப்பட்டு பாய்மரம் விரித்துக் கப்பல் வேகமாகச் செல்கிறது. பாய்மரத்தை அவிழ்த்து விட்டால், கப்பலின் வேகம் குறைந்து போகிறது. நங்கூரத்தைப் போட்டு விட்டாலோ கப்பல் ஒரே இடத்தில் நகராமல் நின்று விடுகிறது. காற்று இடைவிடாமல் வீசிக் கொண்டிருந்தாலும் கப்பல் முன்னேறிச் செல்வதில்லை. இறைவன் திருவருளும் அவ்வாறே. அது எங்கிலும் அருவிபோலும் காற்றுபோலும் பாய்ந்துகொண்டே உள்ளது. நாமே உலக ஆசைகள் என்னும் நங்கூரத்தைப் போட்டுக்

கொண்டு முன்னேறாமல் நிற்கிறோம். இறைவனை அடைய வேண்டும் என்னும் முமுக்ஷுத்துவமாக மனப் பாய்மரத்தை விரிப்பதில்லை. பற்றாகிய நங்கூரத்தை எடுத்துப் பாய்மரத்தை விரித்து வை. சம்சாரக் கடலில் உனது பிறவிக் கடலில் உனது பிறவி கடந்து இறைவன் திருவடியின் கரையில் சேர்க்கும் என்கிறார் பகவான்.

இத்தகைய இறைநாட்டத்திற்கு இடைவிடாத முயற்சி தேவை. இடைவிடாத உள்முக நாட்டம் தேவை.

*நான்என்று எழும்இடம் ஏதுஎன நாடவுண்*
*நான்தலை சாய்ந்திடும் உந்தீபற*
*ஞான விசாரம்இது உந்தீபற.*

*– உபதேச உந்தியார், 19*

என, “நான் என்ற மனம் எழும் இடம் எது என இடைவிடாது உள்ளே நாடினால், அகந்தையாகிய மனம் தன் பிறப்பிடமாகிய ஆத்மாவில் ஒடுங்கி அழியும். இதுவே ஞான விசாரம்” என்று பகவான் வழிகாட்டுகிறார். ஆயினும் நாம் உள்ளே ஆழ்ந்து செல்லும்போது, நமது உலகப் பற்றுக்கள் நம்மை வெளியே தள்ளலாம். அதனை வெற்றி கொள்ள பகவான் வழிகூறுகிறார். கடலின் ஆழத்தில் உள்ள முத்துக்களை எடுப்பவர் செய்யும் உபாயம் போன்றது அது. கடலின் ஆழத்தின் உள்ளே செல்ல முயலும்போது, நீரில் விசை (Buoyancy) அவர்களை மேலே தள்ளி விடும். அதை வெற்றி கொள்ள கனமான கல் ஒன்றை இடுப்பில் கட்டிக்கொண்டு மூழ்குவர். அதுபோன்றே ஆத்மாவை அடைய மனத்தை உள்முகப்படுத்தி இதயத்தில் ஆழ்ந்து மூழ்க வேண்டும். மனம் என்பது வெளியே அலையும் இயல்புடையது. ஆகையால் வைராக்யம் என்னும் கல்லை சிரத்தையுடன் கட்டிக்கொண்டு தன் இதயத்திலேயே மூழ்கவேண்டும். நீரில் மூழ்குபவன் மூச்சை விடாமல் உள்ளே நிறுத்திக் கொண்டு உள்ளே மூழ்குகிறான். அவ்வாறே ‘நான்’

என்னும் உணர்வின் மேல் ஏகாக்கிர மனதுடன் எண்ணம் எழும் இடத்தை நாடும்போது, நமது சுவாசமும் பிராணாயாம நிலையில் கட்டுப்படுத்தப் படுகிறது. இங்ஙனம் தீவிர சிரத்தையுடன் இதயத்தில் மூழ்கி ஆத்மா முத்தினைப் பெறவேண்டும்.

இதையே உள்ளது நாற்பது 28ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்:

எழும்பும் அகந்தை எழும்இடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி — முழுகுதல்போற்
கூர்ந்தமதியால் பேச்சு மூச்சுஅடக்கிக் கொண்டுஉள்ளே
ஆழ்ந்தறிய வேண்டும் அறி.

இதற்கு ஓர் அழகான விளக்கம் தருகிறார் சாதுஓம் சுவாமி. முத்துக் குளிப்பவர் ஒருமுறை முழுகித்தேடி, அம்முயற்சியில் முத்து கிடைக்காவிட்டால், முயற்சியைக் கைவிடுவதில்லை. கடலில் முத்தே இருக்காது என்ற தவறான முடிவுக்கு வராமல், கிடைக்கும்வரை மீண்டும் மீண்டும் முயன்றுகொண்டே இருப்பார். அதேபோன்றே, ஆத்ம சாட்காத்காரம் அடையும்வரை இடைவிடாமல் ஆன்மசாதனை செய்ய வேண்டும்.

அனைவருக்கும் இறையருளால் இந்தப் பிறவி கிடைத்துள்ளது. இதை எங்ஙனம் பயன்படுத்துவது? "பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் இறைவன் அடி பேணாதவர்கள் பெறுதற்கு அரிய பேற்றினை இழந்தவர்கள் ஆகின்றனர்" என்ற திருமூலர் வாக்கின்படி, எல்லாவற்றையும் இழந்து விடுகின்றனர்.

இறைவன் தனது படைப்புகளின்படி செயல்கள் பற்றி இரு விதக் கணக்கு புத்தகங்கள் வைத்துள்ளதாக அப்பர் சுவாமிகள் கூறுகிறார். ஒரு செல்வந்தர் தமது ஊரில் உள்ள அனைவருக்கும் நூல் நூற்கும் இயந்திரங்களையும் பஞ்சு போன்றவற்றையும் அளித்தார். அவ்வூர் மக்களில்

வேலை செய்யும் ஆர்வம் கொண்ட பகுதியினர், தினம் தினம் நூல் நூற்று அதனை அலுவலகத்தில் கொடுத்து, பணம் வாங்கிச் சென்றனர். அவரவது கணக்கில் வருமானம் ஏறிக்கொண்டே வந்தது. மற்றொரு பகுதியினரான சோம்பேறிகள், இயந்திரத்தை மூலையில் போட்டனர். பஞ்சினைக் காற்றில் பறக்க விட்டனர். வீண் அரட்டையில் பொழுது போக்கினர். "இதை யார் கண்டுபிடிக்க முடியும்" என்று எண்ணினர். ஆனால் உரிமையாளரோ வேலை செய்பவர், சும்மா பொழுது போக்குபவர் என்று இருவர் கணக்கையுமே வைத்திருந்தார். இறுதியில் அவரவர் செயல்பாட்டுக்குத் தகுந்தபடியே பலன் கிடைத்தது.

அதுபோன்றே இறைவன் நம் எல்லோருக்கும் மூலப்பொருளாக உடலையும் மனத்தையும் தந்துள்ளான். தன்னைத் தியானித்து, அருளாகிய செல்வத்தை ஈட்டிக்கொள்ள வேண்டும் என்று உடல், மனம், உலகம் ஆகிய அனைத்தையுமே ஈந்து உள்ளான். பட்சபாதம் இல்லாது அனைவருக்குமே பாரபட்சமின்றி அனைத்தையும் வழங்கி உள்ளான்.

பகவானின் இந்த பட்சபாதமற்ற தன்மையினை முருகனார் ரமண புராணத்தில் கூறுகிறார்.

*தன்னியல்பில் பக்கபாதம் சற்றும் பாராட்டாது*
*ஆடாது அமர்நிலை அச்சாணியாம் தன்னடியில்*
*கூடாநின்றார் பிறவிக் கொட்பகற்றும் கோல் வாழ்க.*

*– ரமண புராணம், 68-70*

(தன்னுடைய இயல்பான, சர்வ தந்திர சுதந்திர நிலையில் எப்போதும் இருந்து, சிறிதும் பட்சபாதமின்றி உலகிற்கே அச்சாணியாய் உள்ள தன் திருவடியில் பணிகின்ற அனைவரையுமே, பிறவித் தளையினின்று விடுவிக்கும் சக்தி பகவானுடையது). வீண்பொழுது போக்காது அவற்றை நாம் ஞானம் அடைவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

அந்தச் செல்வந்தனின் தொழிற்சாலையில் பலரும் பல்வேறு தொழில்களைச் செய்கின்றனர். அவரில் எவர் தம் வேலையைத் தேர்ந்து எடுத்து சிறப்பாகச் செய்கின்றனரோ அவர்கட்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதனைச் செல்வந்தர் தம் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்கிறார்.

இறைவன் எதற்காக உடல், மனம் போன்றவற்றை தந்தானோ, அந்தச் செயலைச் செய்யாமல் வீண்பொழுது போக்குபவர் பெயரில் ஒரு கணக்கு (Negative Balance). மற்றையரோ, இறைவன் முன்னால் சென்று தொழுகிறார்கள், மலர் தூவுகிறார்கள், துதிக்கிறார்கள், தியானிக்கின்றார்கள். ஒரு நொடியும் வீணாக்குவதில்லை. இந்தக் கூட்டத்தார்க்கு, இறைவன், இவன் நாம் தந்ததைத் தக்கவண்ணம் பயன்படுத்தி உழைத்தான். இவனுக்குத் தக்க வருமானம் தருவோம் என்று Credit Balance நோட்டில் எழுதி முக்தி அளிக்கிறான்.

இறைவன் எழுதுகின்ற இரு கணக்காகிய Credit Balance கொண்ட அடியாரின் மேல் கணக்கைப் பற்றியும், Debit Balance கொண்ட வீணரின் கீழ்க் கணக்கைப் பற்றியும் அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே!

– அப்பர் - 5-21-9

தொழுதலும் மலர் தூவலும் உடம்பின் செயலைத் துதித்தல், வாக்கின் செய்கை இறைவனை எண்ணி அரற்றல், மன உணர்ச்சியின் வெளிப்பாடுகள். தியானம் மனத்தின் முழுநிலை. இதனையே பகவான்,

*திடமிது பூஜை ஜபமும் தியானமும்*
*உடல்வாக்கு உளம்தொழில் உந்தீபற*
*உயர்வாகும் ஒன்றில்ஒன்று உந்தீபற.*

*– உபதேச உந்தியார், 4*

எனக் குறிப்பிடுகிறார்.

வருமுன் காப்பது என்பது எப்போதும் நல்லது. உடலும் மனமும் நல்ல நிலையில் உள்ளபோதே ஆத்ம சாதனையில் ஈடுபட வேண்டும்.

*எய்ப்பு வந்து அடையும்போது*
*நான் உன்னை நினைக்கமாட்டேன்!*
*அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்*

என்று அரங்கநாதனைப் பாடுகிறார் ஆழ்வார். அதுபோன்றே அப்பரும் இறைவனிடம் பாடுகிறார். யமனுடைய ஆட்கள் வந்து என் உயிரைப் பறித்து விடுவார்கள். அதற்கு முன்பே வந்து அருள் செய்யவேண்டும். உன் திருவடி ஒன்றே காலபயத்தைப் போக்க வல்லது. அதை என் நெஞ்சில் வந்து பதிக்கவேண்டும். அதற்கு நான் முயன்றால் மட்டும் முடியாது, அதை நினைப்பதற்கும் உன் அருள் வேண்டும். நீ என்னை நினைப்பதால்தான் என்னால் உன்னைத் தியானிக்க முடியும். தோன்றி மறையும் மின்னலைப்போல நீ உள்ளத்தில் தோன்றி மறையக்கூடாது. அதில் நீ நிலைத்துநிற்க வேண்டும். அந்த முயற்சியைச் செய்ய எனக்குத் திறனில்லை. நீயாக அருள்கொண்டு என் நெஞ்சத்தே உன் தாளை எழுதி வைத்தால்தான் அது நிற்கும்" என்கிறார் அப்பர். இறைவனோ, "சில ஆண்டுகள் போகட்டும். உன் இந்தப் பிறவி முடிந்தவுடன் எழுதி வைக்கிறேன்" என்று சாக்குப்போக்கு சொன்னான். உடனே அப்பர், "ஐயா! இப்போதே எழுதி வைக்கவேண்டும். பிறகு செய்கிறேன் என்றால் என் பிறவி முடிந்தவுடன் மறுமையில் அருள் செய்வீர்கள் என்பதற்கு என்ன

உத்திரவாதம்? எனவே, இப்பிறவியிலேயே யமதூதர்கள் வருவதற்கு முன்னமேயே என் இதயத்தில் உன் திருத்தாளை எழுதி வைக்க வேண்டும்" என்கிறார்.

*வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்*
*இம்மைஉன் தாள்எந்தன் நெஞ்சத்து எழுதிவை*
*ஈங்குஇகழில்*
*அம்மை அடியேற்கு அருளுதி என்பதுஇங்கு ஆர்அறிவார்*
*செம்மை தருசத்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.*

*– அப்பர் தேவாரம், 096 திருச்சத்திமுற்றம், பாடல் 6*

அப்பர் கூறுவது போன்றே பகவான் வாழ்விலும் ஒரு நிகழ்வு. பகவானிடம் ஓர் அடியார், "பகவானே! உங்களிடம் நான் முழுமையாகச் சரணடைந்து விட்டேன். நீங்கள் என்னை ஆட்கொள்வீர்களா" என வருந்திக் கேட்டார். பகவானும், "ஓ! உங்களை நிச்சயமாக ஆட்கொள்வேன்!" என்றார். அடியவரோ, "என்னை ஆட்கொள்வேன் என்று கூறிவிட்டீர்கள். பின்னால் என்னைக் கைவிடமாட்டீர்களே?" என மீண்டும் வினவினார். பகவானும், "நான்தான் ஆட்கொள்வேன் என்று கூறிவிட்டேனே. மீண்டும் மீண்டும் ஏன் இந்தச் சந்தேகம்? ஒன்று செய்யலாம். ஒரு ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி வாருங்கள். இங்கே சப்-ரெஜிஸ்திரார் நாராயண ஐயர் உள்ளார். அவரிடம் சொல்லி "இன்னாரை பகவான் ஆட்கொள்வது நிச்சயம்" என்று பத்திரத்தில் எழுதி ரிஜிஸ்டர் செய்துவிடலாம். அப்போதேனும் உங்களுக்கு நம்பிக்கை வருமா என்று பார்க்கலாம்" என்று நகைச்சுவையாகக் கூறினார்.

நம் நெஞ்சம் பகவானைக் கண்டும் அவர் மொழி கற்றும் அப்பர் மனம்போல் சிறிதும் உருகவில்லையே என்ற அச்சம் வேண்டாம். என்ன செய்தாலும் கரையாத கல் நெஞ்சமும் பகவானின் திருக்கண்ணோக்கம் பட்ட மாத்திரத்திலேயே கரைந்து உருகிவிடும். கல்லிலே நார் உரிக்கும் பெருந்திறன் கொண்டதன்றோ பகவானின் திருவருள்! இதனையே முருகனார் வியந்து பாடுகிறார்:

*எல்லைக் கல்லா வன்மைக்கு ஏய்ந்த*
*என் போலியர் தம் வன்நெஞ்சக்*
*கல்லைக் கண்ணால் கனியச் செய்து*
*கல்நார் உரிக்கும் கனசித்தன்*
*தில்லைக் கண்ணும்என் சிந்தைக் கண்ணும்*
*குனிக்கும் திரு வேங்கடவன்.*

*– ரமண சந்நிதிமுறை, 295*

கல்லில் நார் உரித்தாற் போன்று எனது வன்மையான மனத்திலிருந்தும் சத்துவத்தைத் தெரிந்து எடுத்து என் அஞ்ஞான அந்தகாரத்தில் ஒளியூட்டுபவனே ரமணன். ஆதிக்கும் ஆதியாய் விளங்குபவன் அந்தத்துக்குப் பின்னாலும் அழியாமல் ஒளிர்வான். என் மனக் கல்லினைப் பிசைந்து கனியாக்கிய பின்னர் என்னுள்ளிருந்த அஞ்ஞானம் என்னும் ஜீவபோதத்தை அறவே நீக்கி, 'நான்-நான்' என்ற ஆத்ம போதமாய்த் தானே ஒளிர்பவன். பொன்னை விடச் சிறந்த ஞான ஒளி படைத்தவன். அந்த சத்குருவைப் பாட வார்த்தைகளே இல்லை. அவனைத் தம் மௌனத்தாலேயே வாழ்த்தலாம் என்கிறார் முருகனார்.

*முன்னுக்கு முன்னா முதலோனை மூவர்முடிப்*
*பின்னுக்கும் பின்னாம் பெரியோனைப் பேராமை*
*என்னுள்ளும் யான்என்று இருந்தோனை மற்றேனைத்*
*தன்னுள்ளும் தானாத் தரித்தோனை வேங்கடனைப்*
*பொன்னுக்கும் பொன்னாய புண்ணியனை மோனத்தால்*
*பன்னாது பன்னிநாம் பாடுதுங்காண் அம்மானாய்.*

*– ரமண சந்நிதிமுறை, 1489*

நமக்குப் பகுத்தறிவு தருகின்ற அந்த மதிக்கே அறிவுக்கே பேரறிவாய் ஒளிதருவது அந்த இறையருள். அந்த மதியினையே விளக்குவது ரமணன் பேரருள். அதன் செயல்பாடு எவ்வாறு எனில், வெளியே போகப் பொருட்களையும், இன்பத்தை நோக்கி வருகின்ற புத்தியை, தன்னுணர்வை இடைமறித்து, உள்நோக்கித்

திருப்பி, இதயத்தே பதிக்கச் செய்து, "அஹம்" பிரம்மாஸ்மி என்ற ஞானத்தை ஊட்டுவதே பகவானின் பேரருள்.

*திரும்பி அகந்தனை தினம்அகக் கண்காண்*
*தெரியும்என் தனையென் அருணாசலா*

*– அருணாசல அக்ஷரமணமாலை, 44*

என்பது பகவானின் பாடல். இந்த ஞான விளக்கம்.

**ம**திக்கொளி தந்துஅம் மதிக்குள் ஒளிரும்
மதியினை உள்ளே மடக்கிப் — பதியில்
பதித்திடுதல் அன்றிப் பதியை மதியால்
மதித்திடுதல் எங்ஙன் மதி.

*– உள்ளது நாற்பது, 22*

என்ற வெண்பாவில் பகவானால் தரப்படுகிறது. ஆத்ம விசாரம் செய்வதற்கான ஞான ஒளியை அஞ்ஞான அந்தகாரத்தல் மூழ்கி உள்ள நம் அறிவுக்குத் தந்து அந்த விசாரத்தில் மூலம் வெளியே செல்லும் அறிவினை உள்ளே மடக்கி, இதயம் நோக்கித் திருப்பி இதயத்தே அதிர்ந்து கொண்டுள்ள இறைவனாம் தலைவனில் பதித்திடுவாய். அஃதில்லாமல், வெற்று அறிவைக் காண்டு பரமேஸ்வரனை எங்ஙனம் அறிய முடியும்? என வினவுகிறார் பகவான்.

அடியார் பலருக்கும் வருகின்ற ஐயம் "நாம் செய்யும் வேலைகள் தியானத்திற்குத் தடையாய் இருக்காதா?" என்பதாகும். இதற்கு பகவான் தரும் விடையானது "எந்த வேலையும் உனதல்ல என்ற எண்ணம் எப்போதும் உன் திருஷ்டியில் இருந்தால் அதுவே போதும். இதை இடைவிடாது ஞாபகப் படுத்திக் கொள்ள முதலில் முயற்சி தேவை. பிறகு அது இடைவிடாமலும் சகஜமாயும் நடந்துகொண்டு இருக்கும். உன் சாந்திக்கும் தடைவராது. தியானமே உன் இயற்கை நிலை. வேறு எண்ணங்கள் வந்து தடை செய்வதால் அதனை இப்போது தியானம் என்கிறார்.

இவ்வெண்ணங்கள் ஒழிந்தபிறகு நீ, நீயாகவே தனித்து இருக்கிறாய். இதுவே சிந்தை அற்ற சமாதி நிலை. இந்த உன் உண்மை நிலையை இந்த சிந்தனைகளை அப்புறப் படுத்துவதே இப்போது தியானம் எனப்படுவது. இப்பழக்கம் உறுதியானால் நமது உண்மை நிலையே உண்மைத் தியானமாக வெளிவருகிறது.

'செயலைவிட்டு செயலற்று அமர்ந்து இருப்பதுதான் பற்றின்மை' என்பது தவறான கருத்து என்று பகவான் கூறுகிறார். எந்தச் செயல் செய்யினும் அவ்வேலையில் கர்த்ருத்வ புத்தியும் (நானே செய்கிறேன் என்னும் தன்முனைப்பு), செயலின் பயனில் இச்சையும் நீங்கியவர் ஆகிவிடின் அதுவே உண்மையான பற்றின்மை. தன்முனைப்பு நீங்கிவிடின், அது நம் உண்முக சாதனையைத் தடை செய்யாது.

"உடலும் மனமும் செயல்புரியும் வேளையில் மனம் சாந்தி நிலையில் இருப்பது சாத்தியமா" என்று அன்பர் வினவியபோது பகவான் விடை தருகிறார். "சமாதி அல்லது பூர்ண சாந்தி அனுபவத்திற்கு "நான் வேலை செய்கிறேன்" என்ற தன்முனைப்பே தடை. வேலை தடையல்ல. "வேலை செய்வது யார்" என்று விசாரித்து உன் உண்மை சொரூபத்தை நினைவில்கொள். அப்போது கர்மங்கள் தானே நடக்கும். உன்னை பந்தப்படுத்தாது. கர்மங்களில் ஈடுபடவோ அல்லது அதனைத் துறக்கவோ முயற்சி செய்யவேண்டாம். அந்த முயற்சியே பந்தம். விதிக்கப்பட்டது நடந்தே தீரும். நீ கர்மம் செய்ய உன் சம்ஸ்காரங்கள் (முன்வினைகள்) விதிக்கப்படவில்லை எனில், நீ என்ன முயற்சிக்கினும் அது நடக்காது. இந்த வேலையை நீ செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டு இருந்தால் நீ என்ன செய்தாலும் அதை உதற முடியாது. எனவே அத்தனையையும் அப் பரம்பொருளுடன் விட்டுவிட்டு, அவன் நடத்தும் வழியில் செல்க.

*பத்தன்நான் என்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்*
*பத்தன்ஆர் என்றுதன்னைப் பார்*

என்கிறார் பகவான்.

*மயி ஸர்வாணி கர்மாணி ஸன்யஸ் யாத்$_3$யாத்மசேதஸா*
*நிராஶீர் நிர்மமோ பூ$_4$த்வா யுத்$_4$யஸ்வ விக$_3$தஜ்வர:*

– *கீதை 3:30*

எல்லாச் செயல்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்து தான் ஆன்மா என்ற அறிவுடன் பலனில் ஆசையின்றி கர்மமோ அதன் வினையோ தனது என்னும் நீங்கி மன எழுச்சி முற்றிலும் நீங்கியவனாய் போர் புரிக என்கிறார் கண்ண பரமாத்மா.

பூர்ண சரணாகதி என்பது கேட்பதற்கு எளிதாகத் தோன்றினாலும், அது நாம் நினைப்பதுபோல் எளிதான பாதையல்ல. ஏனெனில், பூர்ண சரணாகதி செய்ய, நமது அகங்காரத்தை, தன்முனைப்பை முழுமையாகத் துறக்கவேண்டும். ஏன்! நான் சரணாகதி செய்துவிட்டேன். என்ற எண்ணத்தையும் துறக்க வேண்டும். அஹங்காரம், மமகாரம் இரண்டும் முழுமையாக ஒழிந்தாலன்றி எவருக்கும் பரமாத்மாவாகிய சத்யம் வெளிப்படாது என்று கூறுகிறார் அருணகிரியார்.

*யான்தான் எனுஞ்சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும்*
*தோன்றாது சத்தியம் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்*
*கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினால்*
*சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.*

– *கந்தரலங்காரம், 95*

அகங்காரம், மமகாரம் இருக்குமட்டும் பரமாத்ம உண்மை வெளிப்படாது. அந்த அஹங்காரம் முழுதும் நீங்கியவன், ஆத்ம விசாரத்தில் ஈடுபடும்போது, அந்தப் பரந்த வெறுவெளியில் சத்யமே வந்து அவனை

எதிர்கொள்கிறது என்கிறார் அருணகிரியார். இது "க்ஷுரஸ்ய தாரா நிஹிதா துரத்யயா" கத்தி முனையில் நடப்பதுபோன்று கடினமானது என்று கடோபநிஷதம் கூறுகிறது.

ஒருசமயம் அன்பர் ஒருவர் பகவானிடம் வந்து "என்னைத் தங்களது முழு அடியவனாக்கி எனக்கு முக்தி அளியுங்கள்" என்றார். பகவான் அதற்கு விடையேதும் பகராமல் மௌனமாய் இருந்தார். பின்னர் "எல்லோரும் பக்தியையும் முக்தியையும் விரும்புகின்றனர். நான் அவர்களிடம் 'உங்களை எனக்குத் தாருங்கள்' என்று கேட்டால் அவர்கள் தர மாட்டார்கள். பின் அவர்கள் வேண்டுவது மட்டும் அவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்?" (திருவருண்மொழி 543).

பூரண சரணாகதி செய்வது என்பதும் அப்படிச் செய்தபின் எப்போது அதற்குப் பலன் கிட்டும் என்று கேட்பதும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவை. சரணாகதி என்பதே தன்முனைப்பை முழுவதுமாக விட்டு, பகவானிடம் தன்னைப் பூரணமாக ஒப்படைப்பது. தன்னைப் பற்றிய முழுப் பொறுப்புகளையும் பகவானிடமே விட்டுவிடுவது. பின்னர், அதனால் என்ன நிகழும் என்ற கேள்விக்கே சிறிதும் இடம்கொடாது தானாய் இருத்தலே சரணாகதி. எல்லாமே இறைவனின் திட்டப்படி நடக்கின்றன என்பதே உண்மை அறிவு. "ஒரு செயலின் விளைவு இப்படித்தான் இருக்கவேண்டும்" என்று எதிர்பார்ப்பது சரணாகதி அல்ல; அது கட்டளை" என்கிறார் பகவான். "இறைவன் உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்த்து நீங்கள் சரணாகதி செய்துவிட்டதாக நினைக்கிறீர்கள். இதுவா சரணாகதி?" என்று கேட்கிறார் பகவான். ஒரு புகைவண்டியில் செல்பவன் தனது மூட்டையை மேல்தட்டில் வைக்காமல் தானே தன் தலையில் சுமந்துகொண்டு

செல்வானா? என்னிடம் வந்தபின் உங்கள் சுமைகளை என்னிடம் தந்து விடுங்கள் என்று அருள் நிரம்பக் கேட்கிறார் பகவான். நாமோ, நமது தன்முனைப்பு, நமது முன்னேற்றத்திற்காக நாம் போடும் திட்டங்கள் இவற்றை விட்டுவிடத் தயாராக இல்லை. நம் விதியை நாமே உருவாக்கிக் கொள்ள முடியும் என்று எண்ணுவது மூடத்தனம் அல்லவா! சரணாகதியும், தன்முனைப்பும் என்றுமே கைகோர்த்துச் செல்ல முடியாது.

ஒருசமயம், சிவப்பிரகாசம் பிள்ளையின் பாடல்களைப் படித்துக் கொண்டிருந்த தேவராஜ முதலியார் “சரண் புகுந்தவரை முழுமையாக ரட்சிப்பவன் பகவான்” என்று எழுதி உள்ளாரே? சரண் புகுந்த என்னை இதுவரை பகவான் ரட்சித்ததாகத் தெரியவில்லையே? அப்படி ரட்சித்து இருந்தால் என் மனம் முழுத் தூய்மை பெற்று இயல்பில் நிலை பெற்றிருக்குமே” என்று முறையிட்டார். அதற்கு பகவான் “ரட்சிக்கிறேனோ, இல்லையோ! சரணடைந்தபின் நீங்கள் மௌனமாய் இருக்க வேண்டியதுதான் உங்கள் கடமை” என்றார். தன் பக்தனை எவ்வாறு எச்சமயத்தில் கரையேற்றுவது என்று சத்குருவுக்குத் தெரியும். நாம் செய்யவேண்டியதெல்லாம், சத்குருவிடம் நம்மை முழுமையாக ஒப்புவித்து, சும்மா இருப்பதே!

ஆண்டான் அருளால் அமைதி அடையில் அன்றி
ஆண்டும் எவர்க்கும் மற்று எத்திறத்தும் - வேண்டுவதோர்
சாந்தி விளைவதன்று; சந்ததம் அவ்வருளே
ஓர்ந்திடுக உள்ளத்தே ஒருங்கு.

– குருவாசகக் கோவை, 290

சத்குருவின் அருளால் மட்டுமே சாதகர்க்கு பூரண சாந்தி கிட்டும். வேறு வழியேதும் இல்லை. எனவே அத்திருவருளை உள்ளத்தே தியானிப்பாய் என்கிறார் முருகனார்.

1939ஆம் ஆண்டு நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒரு ஐந்து வயதுச் சிறுவன் பகவான் திருமுன் அமைதியாய் அமர்ந்திருந்தான். பகவானைப் பேரன்புடன் நோக்கிக் கொண்டே இருந்தான். அந்தப் பாலகனைப் பார்த்து, பகவான் அச்சிறுவன் தலைமேல் கைவைத்து "எனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். "எதுவுமே வேண்டாம்" என்று சிறுவன் உறுதியுடன் பதிலளித்தான். "ஓஹோ! நீ நம்மைச் சார்ந்தவன்" என்று புன்சிரிப்புடன் கூறிய பகவான், தம்மைச் சுற்றி இருந்த அன்பர்களை நோக்கி, "இதுபோல 'எதுவுமே வேண்டாம்' என்று வேண்டாமை நிலையில் இருந்து, திருவருளில் மட்டுமே நிலைக்கின்ற ஒருவனுக்கு எல்லாமே வந்து சேரும்" என்றார்.

அநந்யா: சிந்தயந்தோ மாம்
யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி$_4$யுக்தானாம்
யோக$_3$ க்ஷேமம் வஹாம்யஹம்

என்று கண்ணபிரான் உறுதி அளிக்கிறான். எவன் வேறு எதைப் பற்றியும் எண்ணாது, என் திருவடியிலேயே மனத்தை வைத்து இடையறாது உபாசிக்கிறானோ, அவனுக்கு ஆத்ம ஞானம் மட்டுமன்றி, உலகில் தேவையான எல்லாவற்றையுமே நான் அளிக்கிறேன்" என்பது கண்ணபிரானின் உறுதிமொழி.

பெருங்கடல் அலை வீசி ஆர்ப்பரிக்கிறது. இதுவரை கடலையே கண்டிராத ஒருவன், அந்தக் கடல்நீரில் உள்ள உப்பைப் காணாமையால், அதையும் ஆற்று நீர்போல எண்ணி, வாயில் விட்டுக் கொள்கிறான். உடனே "சீ! உப்பு" என்று துப்பி விடுகிறான். கடல் நீரில் உப்பினைக் கண்ணால் காண இயலுவதில்லை. சுவையால் மட்டுமே உணர்கிறோம். கடல்நீரில் உள்ள உப்பினைக் கண்ணால் காண இயலுமா? உப்பளத்திற்குப் போங்கள். அங்கே

பாத்திபாத்தியாகக் கடல்நீரைத் தேக்கி வைக்கிறார்கள். சூரியனின் வெயில் மேலே படப்பட நீர் ஆவியாக மாறுகிறது. நீரில் உள்ள ஆவிமாத்திரம் கீழே படிந்து உருப்பெறுகிறது. அதுவே நாம் காணும் உப்பு ஆகிக் கீழே படிகிறது.

கடல் நீரில் உள்ள உப்பு மட்டுமே மெல்ல படிந்து உருப்பெறுகிறது அல்லவா? கண்ணில் காணாது இருந்தது உப்பு; அதைச் சூரியன் வெப்பத்தால் காணும்படி செய்தான். அதுவே உப்பு என்ற பெயர் பெற்றது. மீண்டும் ஒரு பிடி உப்பை எடுத்து நீரில்போட, உப்பு நீரில் கரைந்துபோய் உப்பெனும் தோற்றம் மாறித் தண்ணீராகவே நிற்கும். உப்பின் உருவம் தண்ணீர் சேர்ந்ததால் அது அதனோடு ஒன்றிவிடும்.

உடம்பினை எடுத்துக்கொண்டு வாழ்வது ஜீவன். உலகம் அறிய பாத்தியில் வினைகளின் (கர்மங்கள்) வெம்மையிலே உடலாகிய உருவம் எடுக்கிறது. எங்கும் திரிந்து உலகச் செயல்களில் ஈடுபடுகிறது. ஸ்தூல உடம்பை நீத்தபோதும், சூட்சும உடலான சட்டையை அது நீக்குவதில்லை.

அதே ஜீவன் சத்குருவின் அருளால் ஞானம் பெற்று பாசமாகிய கட்டினை அறுத்து விடுகிறது. பாத்தியில் விளைந்து, பின் உப்பு மூட்டை ஆகி உருவத்தோடு வாழும் ஜீவன், பாசமாம் கட்டினை அறுக்கும்போது, இறைவனில் ஒன்றிக் கரைந்து விடுகிறது.

‘பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே’ என மணிவாசகர் பாடுகிறார். உப்பை நீர் தன்னுள் அடக்குவதுபோல், பகவான் ஜீவனைத் தன்னுள் அடக்கிக் கொள்கிறான். ஜீவனுக்குத் தனித்துவம் இழந்து மறைந்து, கரைந்து விடுகிறது. நிறமும், உருவும் பெற்றிருந்த உப்பு, நீரினையே தனக்குரிய வடிவமாகிப் பெறுவதுபோல், ஜீவன் பரமாத்ம ஸ்வரூபமாகி

*நிற்கிறது. இந்த அழகான விளக்கத்தைத் திருமூலர் அளிக்கிறார்.*

*அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்*
*உப்பெனப் பேர்ப்பெற்று உருச்செய்த அவ்வுரு*
*அப்பினில் கூடியது ஒன்றுஆகும் ஆறுபோல்*
*செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே.*

*– திருமந்திரம், 136*

*இந்தக் கருத்தினையே பகவானும் அருணாசல அஷ்டகம் மூன்றாவது பாடலில் உப்பினுக்குப் பதிலாக சர்க்கரை கடலில் கரைவதை உவமையாகக் கூறி விளக்குகிறார்.*

*உன்னுரு உனல்அற உன்னிட முந்நீர்*
*உறுசருக்கரை உரு வெனவுரு ஒயும்*
*என்னையான் அறிவுற என்னுரு வேறேது*
*இருந்தனை அருணவான் கிரியென இருந்தோய்.*

*– அருணாசல அஷ்டகம், 3*

*"அருணாசலா! உன்னை என் எண்ணங்கள் அனைத்தையும் நீக்கி உள்ளுணர்வில் தியானிக்கும்போது கடலில் கரையும் சர்க்கரை போன்று உடல்-மனம் இணைந்த சித்-ஜடக்-கிரந்தியால் தோன்றிய ஜீவன் ஆத்மாவில் கரைந்து விடும். என்னையே நான் ஜீவபோதம் அழிந்து உள்நோக்கி விசாரிக்கும்போது எனக்கு என்று தனியாக உருவம் ஒன்று இருக்கிறதா என்ன? இதை எனக்கு அறுவுறுத்தவே நீ அருணகிரியாய் நிற்கிறாய்" என்கிறார் பகவான்.*

*"ஓயாத கவலைகளையே பயனாய்த் தருகின்ற சங்கல்பங்களால் தூண்டப்பட்டு, அதற்கேற்பக் கருமங்களைச் செய்துகொண்டே போவதைவிட்டு இறைவனது திருவருள் எவ்வாறு நடத்துமோ அவ்வாறு நடக்க முழு மனத்துடன் விட்டுக் கொடுத்தலே உண்மையான கடவுள் பூஜை" (குருவாசகக் கோவை, 427) என்று முருகனார் விளக்குகிறார்.*



*என்புகல் இடம் நின் இட்டம் என்னிட்டம்*
*இன்பதெற்கு என்னுயிர் இறையே*

*– அருணாசல பதிகம், 2*

என்று சாதகன் தன் தன்முனைப்பையே முழுவதுமாக இறைவனில் கரைத்து, அவனருளே எல்லாவற்றிற்கும் காரணமாய் அமைகிறது என்பதைப் பகவான் இங்கு நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

அப்பினில் கரையும் உப்பாக ஆண்டான் அருளில் கரைவோமோ?

பகவான் பணியில் தங்கள்,

**எஸ். ராம்மோஹன்**

# பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம்

## கௌதமன்

மௌனகுருவாய் அமர்ந்து அந்த சுத்த மௌனத்தின் மூலமே தத்துவம் அனைத்தையும் நாடினோர் இதயத்தில் பதித்தவர் பகவான். முருகனார் போன்ற பேரன்பர்கள் வேண்டுகோளின்படி அவர் அருளிச் செய்தவை உபதேச உந்தியார், உள்ளது நாற்பது போன்ற நூல்கள். அதேபோன்ற அத்வைத நூல்களின் பொறுக்கும் மணிகளை – தேவிகாலோத்தரம், ஆன்ம சாட்சாத்கார ப்ரகரணம், சங்கரரின் படைப்புகளில் தேர்ந்தெடுத்தவை, பகவத் கீதையின் தேர்ந்த சுலோகங்களின் மொழிமாற்றம் – போன்றவற்றையும் தமிழில் அருளினார். அருணாசல பஞ்சகம் அவரது ஆத்மாவில் இருந்து பொங்கி வந்த அருள் ஊற்று. இதுவன்றி பகவான் ஆத்மிகச் சொற்பொழிவு ஏதேனும் செய்திருக்கிறாரோ என்ற கேள்வி அடியார் உள்ளத்தில் எழலாம். நமது மௌனகுரு பிரசங்கமும் செய்திருக்கிறார்! ஒரே ஒருமுறை ஈசான்ய தேசிகர் வேண்டுகோளின்படி பகவான் ஈசான்ய மடத்தில் உரையாற்றி உள்ளார். அதற்கு பகவான் தேர்ந்து எடுத்த நூல் எது தெரியுமா? பெரும்பாலோர்க்கு பரிச்சயமான உபநிடதம், கீதை போன்றவை அல்ல! பகவான் பேசிய தலைப்பு அவ்வளவாக பிராபல்யம் அடையாத 'கீதா சாரத் தாலாட்டு' என்ற நூல்தான். பகவானே தனது அருளுரைக்காகத் தேர்ந்தெடுத்த இந்த நூலைப் பற்றி இங்குக் காண்போமா!

கீதாசாரத் தாலாட்டு திருவேங்கட நாதரால் இயற்றப் பட்டது. இவரது பின்புலம் முழுமையாக அறியப்

படவில்லை. மதுரை சிவானந்த சுவாமிகளால் உரை இயற்றப் பட்டது. அத்வைத ஞான நூல்களில் ஓர் ஒப்புயர்வற்ற மணியாய்த் திகழ்வது இது. இப்போது நூலைக் காண்போமா!

## கடவுள் வணக்கம்

*ஐவகைக் பொருளு நான்கு கரணமும் குணங்கள் மூன்றும்*
*செய்வினை இரண்டும் ஒன்றி யாவரும் திகைப்ப நின்ற*
*பொய்யிருள் அகல ஞானப் பொருள் கதிர் விரித்த புத்தேள்*
*கைவளர் ஆழிச் செங்கண் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.*

*விளக்கம்:*

*ஐந்து வகையான பஞ்ச பூதங்களும் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்), நான்கு கரணங்களும் (மனம், புத்தி, அஹங்காரம், சித்தம்), ஸத்வம்-ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களும், புண்ணிய பாபமாகிய கர்மத் தொகுதிகளும், ஒன்றாகச் சேர்ந்து இவ்வுலகை உண்டாக்கி ஜீவனை மதிமயங்கச் செய்கின்றன. அந்த அஞ்ஞான இருள் அகலும்படி தனது ஞானகிரணங்களை விரித்து ஒளி தருபவனும், பாஞ்சஜன்யம் எனும் சங்கையும், சுதர்ஸன சக்கரத்தையும் ஏந்திய திருக்கரத்தானும், செந்தாமரை போன்ற அலர்ந்த கண்களை உடையவனும் ஆகிய கண்ணபிரானைத் தியானிப்போமாக!*

வேங்கடநாதர் யார் இதனை எழுதியது எதைப் பற்றியது என்பதை அடுத்த பாவில் விளக்குகிறார். இது வெண்பா.

*மாதையர்போன் வேதநவில் வாய் வேங்கடநாதன்*
*காதைஉறப் பார்த்தனுக்குக் கண்ணன்அருள் - கீதைக்*
*கருத்துயர் தாலாட்டாகக் கட்டுரைத்தான் யாரும்*
*கருத்துயர் தீர்ந்துஎய்தக் கதி.*

*பொருள்:*

*மாதை என்னும் நகரில் உள்ளோர் தலைவனும், எப்போதும் வேதம் ஒலிக்கின்ற திருவாயை உடைய*

வேங்கடநாதன் எனும் அந்தணன், அருட்சுவையும் பொருட்சுவையும் மிகுந்ததுவாய், அர்ஜுனனுக்கு கண்ணன் உபதேசித்த கீதையின் சாரத்தை உலகிலுள்ள அனைவரும் பிறவிப்பிணி தீர்ந்து ஆத்ம சாட்சாத்காரம் பெறும்படி, தாலாட்டாக இயற்றித் தந்துள்ளார்.

*(இவரது ஊராய் குறிப்பிடப் பட்டுள்ள மாதைப்பதி, மாதேவிப் பட்டணம் என்ற ஊராகவோ, அல்லது திருவாமாத்தூராகவோ இருக்கலாம்).*

## நூல்

*சீராரும் பரமார்த்த தெரிசனத்தை அருள்செய்யப்*
*பேராரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ (1)*

*பொருள்:*

பகவானாகிய கண்ணபிரானே! சிறப்பு மிகுந்த பரமார்த்த ஞானத்தை அர்ஜுனனுக்கு அருள் செய்வதற்காக பெருமை பொருந்திய ஞான ஆசிரியராக வந்தவரோ நீர்?

*(பகவானுடன் நேர் உரையாடலாக இது ஆக்கப் பட்டுள்ளது)*

*பாடல்:*

*திருத்தேரில் சாரதியாய்ச் சேர்ந்திருந்தும் கீதையினால்*
*அருச்சுனர்க்கு மெய்ஞ்ஞானம் அனைத்தும்உரை செய்தவரோ (2)*

*பொருள்:*

சிறப்பு வாய்ந்த ரதத்தில், தேர்ப்பாகனாய் அமர்ந்து பெருமை வாய்ந்த கீதைநூல் வாயிலாக அர்ஜுனனுக்கு ஆத்மஞானம் முழுவதையும் அருளிச் செய்தவரோ நீர்?

*(வழக்கமாக, முமுட்சுத்துவம் மிகுந்த சீடன் எப்படித் தலையில் நெருப்புப் பிடித்த ஒருவன் தண்ணீரை நோக்கி விரைந்து செல்வானோ அதுபோன்று தனது அஞ்ஞானத் தீயை அணைக்க ஆசாரியனை நாடி சீடன் விரைந்துவந்து அவர் அடிபணிவான். ஆனால் இங்கோ நிலைமை தலைகீழ்! சீடன் உயர்ந்த*

ரதத்தில் அமர்ந்திருக்க, தானே அவனை நாடிவந்த ஆசாரியனாம் கண்ணன் தாழ்ந்த தேர்த்தட்டில் அமர்ந்து ஞானோபதேசத்தை அளிக்கிறான் என்று ஆசார்யனது பேரருளை வேங்கடநாதர் சுட்டிக் காட்டுகிறார்).

*[மிகைப்பாடல்:*

*சாரதியாய்த் தேர்செலுத்தித் தனஞ்சயநீ தாணையினைப்*
*பாரெனப்பார்த் தேவிசயன் பயந்து மலர்த்தாள் வணங்கி*
*அமர்க்குவந்த சுற்றத்தா ரனைவரையுங் கொல்வதினா*
*லெமக்கழியாச் சோகம் விரைந் தெய்துமென*
*வேவினவினரோ]*

*பார்த்தசாரதிப் பெருமான் "உனது எதிரிகளைப் பார்ப்பாயாக" என்றுகூறி தேரினை எதிர்ப்படைகளின் அணிவகுப்புக்கு எதிரே நிறுத்த, அங்கே உறவினர்களையும் ஆசான்களையும் கண்ட தனஞ்சயன் "சுற்றத்தாரையும் ஆசான்களையும் போரில் கொல்வதினால் எனக்கு அழியாத சோகம் வந்துசேருமே" என்று மனங் கலங்கினான்.]*

*பாடல்:*

*செஞ்சமரில் பந்துஜனம் சேதம்வரும் என்றுஇரங்கி*
*அஞ்சினவன் பயம்தீர்த்தே அமர்செய்யச் சொன்னவரோ (3)*
*சுற்றம்அரில் சோகம்எனச் சொல்லினை சற்று*
*அறிந்தவன்போல்*
*கற்றுணர்ந்த பேர்அதனால் கலங்கார்காண் என்றவரோ (4)*

*பொருள்:*

*இந்த யுத்தம் தர்மயுத்தம் ஆயினும் உறவினர் மற்றும் வணங்கத்தக்கவர் அனைவரும் நாசமடைவார்களே என்று கலங்கிய பார்த்தனைப் பார்த்து, அவனது கலக்கம் அழியும்படி அவனை அருட்பார்வையால் நோக்கிக் கண்ணன் கூறலுற்றான்.*

*"இந்தப் போரினால் சுற்றத்தினர் மற்றும் மரியாதைக்குரியவர் அனைவரும் மரணமடைவர். அதனால் பெரும்கவலை வந்து பற்றும்" என*

*அனைத்தையும் அறிந்த ஞானிபோல் பேசுகிறாய். கற்க வேண்டிய அனைத்தையும் கற்று பூர்ண ஞானம் பெற்றவர்கள் மற்றையோர் இறந்தாலும், இருந்தாலும் கவலையுற மாட்டார்கள். இதை நீ அறியாயோ?" என அர்ஜுனர்க்கு உபதேசித்தவர் அல்லவா நீர்? (4)*

*பாடல்:*

*கலங்காரோ இறப்புவரில் கற்றுணர்ந்த பேரேனும்*
*மலங்காமல் நான்இருக்கும் வகைஉரையும் எனவினவ (5)*
*நீயும்நானும் புவிமேல் இருபர்களும் மெய்யுணர்வால்*
*ஆயுங்கால் பிறந்துஇறப்பது ஆர்க்கும்இலை என்றவரோ (6)*

*பொருள்:*

*(அர்ஜுனன் சொல்வது) மரணம் வந்த காலத்தே கற்க வேண்டியவற்றைக் கற்று உணர்ந்த மகான்களும் கலங்காது இருப்பார்களோ. (அப்படி அவர்கள் கலங்காது இருப்பார்களே ஆயின் அவர்களைப்போல்) நானும் மனக் கலக்கம் அடையாது இருக்கும் வழியை உபதேசிப்பீர்*

*(கண்ணன் மறுமொழி) உண்மை ஞானத்துடன் ஆராய்ந்து பார்த்தால் அர்ஜுனனாகிய உனக்கும், கண்ணனாகிய எனக்கும், இங்கு பூமியில் வாழ்ந்திருக்கும் எவருக்குமே பிறப்பு, இறப்பு இல்லை என்பதை நீங்கள் விளக்கி அருளினீர் அல்லவா!*

*பாடல்:*

*ஈங்குளவர்க்கும் பிறந்துஇறப்பது இல்லையென்றீர் இவ்வுலகில்*
*ஈங்குபவம் ஆர்க்கு? இதனைநிச்சமாய்ச் சொல்லும்என (7)*
*இத்தரையில் பிறந்துஇறப்பது எடுத்தஉடற்கு அடுத்தபொறி*
*நித்தியம்ஆகிய ஆன்மா நின்சொரூபம் என்றவரோ (8)*

*பொருள்:*

*(அர்ஜுனன்) இவ்வுலகில் எவர்க்கும் பிறப்பும் இறப்பும் இல்லை என்றீர்கள். ஆனால் தினந்தோறும்*

இவ்வுலகில் இறப்பும் பிறப்பும் நிகழ்தலைப் பார்க்கிறேன். இவை யார்க்கு நிகழ்கின்றன என்பதை உறுதியாய்க் கூறுவீராக

(கண்ணன் விளக்கம்) இந்த உலகில் பிறப்பதும் இறப்பதும் கர்மவினைகட்கு ஏற்றபடி தோன்றி உள்ள சரீரத்துக்கே ஏற்பட்ட விதியாகும். தோன்றல்-மறைதல் இன்றி நித்தியமாய் உள்ள ஆத்மாதான் உண்மையில் உன் சொரூபம் என்று கூறி அருளினீர் நீர்.

பாடல்:

*அங்கம்உயிர் இந்திரியம்நான் அன்றிவேறு எனைக்காணேன்*
*இங்குயான் வேறுண்டேல் எனக்குஅறியப் புகலும்என (9)*
*மெய்உயிர் இந்திரியம்அலால் வேறறியேன் என்றவனைப்*
*பையஅவையால் அறியப்படானும் நீ என்றவரோ (10)*

பொருள்:

(அர்ஜுனன் ஐயம்)

சரீரமும் பிராணனும் இந்திரியங்களும் இவையே நான் என்று இதுவரை அறிந்திருக்கிறேன். இவைகளுக்கு அந்நியமாய் என்னை வேறு எதாகவும் கண்டதில்லை. இவைகளுக்கு அந்நியமாய் 'நான்' என்று ஒன்று இருக்குமாயின் அதை நான் தெரிந்துகொள்ளும்படி அருள் புரிவீராக!

(கண்ணன் மறுமொழி)

ஆழ்ந்த உண்மை எதுவெனில், சரீரமும் பிராணனும் இந்திரியங்களும் இவற்றையே நான் என்று அறிந்திருக்கிறேன் அல்லாமல், இந்திரியங்களுக்கு அந்நியமாய் எனது சொரூபத்தை இதுவரை நான் கண்டதில்லை என்று கூறியவனுக்கும், அடிப்படை அறிவாய் இருந்து அறிபவனும் முன்னால் கூறப்பட்ட பௌதிக சரீரத்தால் அறியப்படாதவனும், அவற்றிற்கு

*விஷயமாய் இருப்பவனும், நீயாகிய ஆத்ம ஸ்வரூபமே என்று சொல்லி அருளினீர் அல்லவா (10)*

*பாடல்:*

*தேகம்வேறாகில் அதைச்சேர்ந்தது இவன்ஏது எனவே*
*சோகமே விளைகருமத் தொடர்ச்சியினால் என்றவரோ (11)*

*பொருள்:*

*தேகமும் ஆத்மாவும் வேறு வேறு ஆக இருப்பின், இச்சரீரத்தில் இவ்வாத்மா வந்து பொருந்துவது எவ்வாறு என்று அர்ஜுனன் கேட்க, துக்கத்தையே விளைவிக்கின்ற கர்மவினைகளால்தான் என்று கண்ணன் விளக்கினான்.*

*பாடல்:*

*தேகம்எடா முன்கருமச் செயல்வருமாறு ஏதெனவே*
*ஏகமாய் மரமும்வித்தும் எனும்முறைபோல் என்றவரோ (12)*

*பொருள்:*

*(தேகம் எடுப்பதும் பிறப்பு-இறப்பும் முன்வினையின் விளைவுகள் என்றால்) முதன்முதலில் தேகம் எடுப்பதற்கு முன் கருமத் தொகுதி ஏதும் இருக்காதே, பின் எப்படி கர்ம வினையின் விளைவான தேகம் வரமுடியும் என்று கேள்வியை அர்ஜுனன் கேட்க, சம்சாரம் என்பது துவக்கமே இல்லாத அனாதி; விதையும் மரமும் போன்று ஒன்று மற்றொன்றுக்கு காரணம் ஆகிறது என்று கூறினீர் அல்லவா!*

*பாடல்:*

*காயமும்தானும் பிறிதேல் கன்மம்எவர் தெய்ததென*
*தீயஉடற்கலது கன்மச்செயல் தனக்கேது என்றவரோ (13)*

*பொருள்:*

*சரீரமும் ஆத்மாவும் வேறுவேறு என்று கூறினீர்கள். அப்படியானால் விளைவைத் தருகின்ற கர்மங்களை எவர் செய்கிறார் (ஆத்மாவா அன்றி சரீரமா)? என்று அருச்சுனன் கேட்க, பலன்களைக் கொடுக்கும் கர்மமானது கொடிதாகிய தேகத்தினால்*

செய்யப்படுவதே அன்றி, ஆத்மாவிற்கும் அதற்கும் தொடர்பில்லை என்று விளக்கினீர் அல்லவா?

பாடல்:

*படர்கருமம் உடல்செய்யின் பலம்உறுவது யார்க்குஎனவே*
*அடர்பலமும் உடற்கேயாம் அறிவார்க்குஏது என்றவரோ (14)*

பொருள்:

(நித்திய, நைமித்திய, காம்ய, பிராயச்சித்தம் என்று) பலவாறாக விரிந்துள்ள கர்மங்களை உடல் செய்யும் என்றால், அக்கருமங்களின் விளைவுகள் யார்க்கு வந்து சேரும் என்று அர்ஜுனன் கேட்க, கர்மங்களின் விளைவுகளாக வந்து சேர்கின்ற புண்ணிய பாவ பலன்களும் சரீரத்துக்கே ஆகும். சாட்சியாக மட்டுமே இருந்து பார்த்துக்கொண்டு இருக்கின்ற ஆத்மாவுக்கு அல்ல என்று விளக்கி அருளினீர் அல்லவா?

பாடல்:

*வெய்யவினை உடற்குஎன்றால் மெய்யிங்கே விழஆன்மா*
*ஐயமற நரகசொர்க்கம் அனுபவிப்பது ஏதுஎனவே (15)*
*அநுபவமே இலைஅது வீண்ஆரோபிதம் நிகழ்த்தில்*
*தநுகரணச் செயல்தனதாச் சார்வதுபோல் என்றவரோ (16)*

பொருள்:

கொடிதாகிய கன்மவினை சரீரத்துக்குத்தான் என்றால் சரீரமானது இந்தப் பூமியில் மரணத்தை அடைந்தபின் ஆத்மாவானது சந்தேகமில்லாமல் சுவர்க்க நரகங்களை அனுபவிக்கும் என்று சிலர் கூறுவது உண்மையா என்று அர்ஜுனக் கேட்க

ஆத்மாவிற்கு கர்ம சம்பந்தமும் இல்லை. சுவர்க்க நரக அனுபவங்களும் இல்லை. ஆன்மாவுக்கு சுவர்க்க நரக அனுபவம் உண்டென்று என்ற கருத்து தேகம் மற்றும் இந்திரியங்களின் செயலை, ஆத்மாவின் செயலாகத் தவறாக எண்ணுவது போன்று தவறான கற்பிதம் என்று விளக்கினீர் அல்லவா?

(தொடரும்)

# குருவின் அருள்

## நொச்சூர் வெங்கடராமன்; தமிழாக்கம்: கௌதமன்

என் ஆத்மாவின் அடியாழத்தினை அடையும்
எனது ஆசான் ரமண அருணாசலனின்
புத்துயிர் தரும் மௌனம்
ஒரு புதுமலரின் வாசம் போல்
எங்கனும் பரவி நிற்கிறது
'அவர்தம் உடலினை நீத்துவிட்டார்'
என்றே பகர்வர் சிலர்
அதை நான் சிறிதும் நம்பவில்லை
அந்த வ்யக்தி பூரணமாக
இங்கே உள்ளது முழுதும் உள்ளது
என்னுள்ளே அவர் 'நான்-நான்' என
சாந்தியாகவும், ப்ரக்ஞையாகவும், அன்பாகவும்
இதயத்தே என்றும் நடனம் புரிகிறார்
ஒவ்வொரு உருவும் அவர் உருவே
ஒவ்வொரு இதயமும் அவர் இருப்பே
அந்தோ! சிறிய ஜீவ போதத்தில் சிக்கியுள்ள மனிதன்
அனைத்தையும் தனதாக்க எண்ணுகிறான்
என்னுடைய பிரபு தனது எல்லையற்ற கருணையால்
என் இதயத்தை முற்றிலும் ஆக்ரமித்து
என்னை முழுவதுமாய் ஆட்கொண்டான்
என்னுடைய தேகம், அங்கேயே அப்பொழுதே
ஸத்குருவின் திருக்கரங்களில்
விருப்பத்துடன் செயற்படும் கருவியானது
குளிர் நீரோடைபோல் சாந்தமாய் பெருகும்
அவரது அருள் என்னுடைய ஜீவனில்
அடிநாதமாய் ஓடுகிறது
என் அருகில் வரும் எவருமே
அந்தக் குளிர்மையால் கவரப்படுகின்றனர்
இது என் செயலல்ல; அவரதே அது
அது எங்ஙனம் செயல்படுகிறது
என்பதை நான் சிறிதும் அறியேன்.

# ரிபுகீதை

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீ பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

எதனிடையில் விருத்தியெலா மிலாத தாகு
மெதனிடையில் வேறணுவு மிலாத தாகு
மெதனிடையி லகந்தையெலா மடங்க லாகு
மெதனிடையி லாசையெலா மழிந்தே போகு
மெதனிடையின் மனதுமுதன் மரிப்ப தாகு
மெதனிடையின் மயக்கமெலா நசிப்ப தாகு
மதுவகமென் றதிடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். [26/31]

எதனிடையிற் றேகமுதற் றெரிய தாகு
மெதனிடையிற் றிருசியமே திகழா தாகு
மெதனிடையிற் சித்தமுமே மரித்துப் போகு
மெதனிடையிற் சீவனுமே கலந்த தாகு
மெதனிடையி னினைவெவையும் லயித்துப் போகு
மெதனிடையி னிச்சயமு நசித்த தாகு
மதுவகமென் றதிடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். [26/32]

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.256 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: ஒரே விருத்தியில் மனத்தை நிறுத்தலே சாதாரணமாய் தியானம் எனப்படுகிறது. அதனால்,

மனம் பலவாறு சிதறாது ஒருமுகமாய்க் குவிகிறது. அப்போது, அவ்வொரு விருத்தியும் ஓய்ந்து, சுத்த சைதன்யம் ஒன்றே துலங்கும். அதுவே நமது இயல்பு நிலை.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.67 - பதிப்பு 2000] நான் என்னும் அகந்தை தூக்கத்தின் போது இல்லை; விழிப்புற்றதும் அது தேகாகாரமாகத் தோன்றி, பற்பல விஷய நினைப்புகள் உறுகின்றது. இவ்வாறு தேக உலகங்களுடன் சம்பந்தப்பட்டு இயங்குவதே அஹம் விருத்தி எனப்படும். அஹம் என்பது ஆத்மா ஒன்றையே குறித்து விளக்குங்கால் அது அஹம்ஸ்புரணம் எனப்படும். ஞானிகளிடம் இது எப்போதும் இயல்பாகவே விளங்கிக் கொண்டிருக்கும். இதுவே ஞானமென்றும், பராபக்தி நிலையென்றும் சொல்லப்படும். இதனையே அகண்டாகார விருத்தியென்றும் சொல்வர். இவ்விடத்தே 'விருத்தி' என்பதனால் இதனைப் பிற விருத்திகளைப் போன்றதாய் எண்ணக் கூடாது. சாதாரணமாய் விருத்தி என்னும் சொல், ஏதோ ஓர் விஷயத்தைப் பற்றி எழுவதும் ஒடுங்குவதுமாம் நினைப்பையே குறிக்கும். அது மனோமயம். அகண்டாகார விருத்தியோ மனத்தைக் கடந்து ஆத்மாகாரமாய் இடையறாது இயல்பாக விளங்குவதாம். இதுவே ஞானிகளின் இயல்பாம் நிரந்தர அனுபூதியாம்.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.213- பதிப்பு 2004] ஸ்ரீ பக: இவ் அகந்தைப் பேய் தனக்கென்றோர் வடிவற்றதாய் ஓர் உடல் வடிவைப் பற்றிக் கொண்டெழுந்து நடமாடி மறைகிறது. உடலை நான் என்று அபிமானிப்பது எதுவோ அதுவே இவ்வகந்தை. அதையே நாம் ஒழிக்க வேண்டும். இந்த நான் எங்கிருந்து கிளம்புகிறதென்று ஏகக்கிரமாய்க் கவனித்தால் அது தன் மூலத்தே ஒடுங்கிவிடும்.

*ஜடவுடல் நானென்று விவகரிக்காது. இந்த அகந்தை-நானே உடல் என்று விவகரிக்கிறது. இவ்வாறு உடலை நானென்று அபிமானிக்கும் இவ் அகந்தை யாதென்றாய்ந்தால் அது மறைந்துவிடும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.318 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: விருப்பு வெறுப்பற்றிருத்தலே உதாஸீனத்தன்மை. திருசிய மனைத்தும் இருப்பேதுமின்றித் தோன்றி மறைவதே என்று உணருங்கால், விருப்பு வெறுப்புகளுக்கு இடமேது? மேலும் அகந்தை ஒன்றைப் பற்றியே நிகழும் விருப்பிற்கும் வெறுப்பிற்கும், அஃது அற்றவிடத்தே இடமேது?*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக். 9 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: எங்கும் எப்போதும் பரிபூரணமாய் நிறைந்து, ஸ்வயம் பிரகாசமாய் ஜ்வலித்துக் கொண்டிருப்பதான ஆன்மா என்கிற உள்ள பொருளை இல்லாத பொருளாகவும், உண்மையற்றதாகவும் நினைப்பதே அஞ்ஞானம் எனும் மாயை. இதையே எதிர் நிலையில் சொல்வதென்றால், உண்மையானவை, தன்னிருப்பாய் நிதர்சனமானவை என்று நாம் நம்பும் உலகம், ஜீவன், பரமன் (கடவுள்) என்பதான இல்லாத பொருள்களை, உள்ள பொருள்களாக எது நம்மை நினைக்கச் செய்கிறதோ அதுவே மாயை. மனம் ஆத்ம ஸ்வரூபத்தினின்றும் வெளிப்படும்போது ஜகம் தோன்றும். உலகம் கண்முன் விரியும்போது ஆத்ம ஸ்வரூபம் தோன்றாது. ஸ்வரூபம் தோன்றும் (பிரகாசிக்கும்) போது ஜகம் தோன்றாது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.214- பதிப்பு 2004] ஸ்ரீ பக: அகந்தை ஒன்று எழுந்த பிறகே மும்முதல்களைப் பற்றிய நினைவு எழுகிறது. அகந்தையற்ற தூக்கத்தில் இவை தோன்றினவா? இல்லை. ஆனால் தூக்கத்தில் நாமிருந்தோம்;*

இப்போதும் இருக்கிறோம். மும்முதல்கள் உண்மையெனில் அவை தூக்கத்தின் போதும் விளங்க வேண்டும். மேலும், உடலும் உலகமும், 'நான் இருக்கிறேன் நான் இருக்கிறேன்' என்று கூறுகின்றனவா, அல்லது நாம் 'இதோ உடலுலகங்கள் இருக்கின்றன' கூறுகிறோமா? நம்மைப் பற்றிக்கொண்டு நமக்கே உடலுலகங்கள் தோற்றமாவதால், அடிப்படையாம் நாம் யாரென்பதையே அறிஞன் தெளிய வேண்டும். நாம் யாரென்பதை உணர்ந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும். அதன்பிறகு சந்தேகம் எதுவும் எழாது.

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.137- பதிப்பு 2004]* ஸ்ரீ பக: எல்லாம் என்று சொல்லப்படும் ஸமஷ்டியையும் ஸத்தையும் சேர்த்தே 'ஈச்வரன்' என்கிறோம். அகந்தை முதலாம் கருவி கரணாதிகளையும் சத்தையும் சேர்த்து 'ஜீவன்' என வழங்குகிறோம். நாம ரூப பேதங்களையும் சத்தையும் சேர்த்து 'ஜகத்' என்று சொல்கிறோம். இம் மூன்றிலும் உண்மையாயுள்ளது ஸத்தொன்றே. எல்லாமென்னும் ஸ்மஷ்டியும், அகந்தை முதலாம் ஜீவ உபாதியும், நாமரூப பேதமும் தோற்றமாத்திரமே. உலக வழக்கில் கூறப்படும் இருப்பும் இன்மையும் இரண்டுமற்றதே யதார்த்த ஸத். ஈச்வரனென்னும் பாவனையுட்பட, எத்தகைய பாவனையும் அற்றவிடமே ஸத்ய ஸ்வரூபம்.

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.116- பதிப்பு 2004]* ஸ்ரீ பக: ஆபத்தோ சம்பத்தோ ஆத்மாவுக்கன்னியமாய் வேறெதுதான் இருக்க முடியும்! இடையறாது 'நான்-நான்' எனச் சுடரும் அகண்ட போத சாகரத்தின் ஒரு சிறு குமிழியே அகங்கார வடிவனாம் ஜீவன். குமிழியும் நீரே. நீருக்கு அன்னியமாய் அதற்கோர் இருப்புமில்லை. அது உடையுங்காற் கடலுடன் ஒன்றாகிறது; இருக்குங்காலும் அது கடல்

*நீர் மயமே. சர்வ சாதாரணமான இவ்வுண்மையை உணராது, கணக்கற்ற பற்பல வழிகளிலும் அவற்றின் சிக்கல்களிலும் கருத்தைச் செலுத்திக் குழப்பம் உறுகின்றனர் பெரும்பாலோரும். எத்தனை மதங்கள்! சித்தாந்தங்கள்!! கொள்கைகள்!!! அப்பப்பா. இவை யாவும் முடிவில் எதற்காக? தனது உண்மையை உணர்வதற்கே இத்தனை சாதனைகளும் துணைகளும் வேண்டியிருக்கின்றன!*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.244- பதிப்பு 2004] ஸ்ரீ பக: தூக்கத்தின்போது எம்முயற்சியுமின்றியே அகந்தையற்று, அதனால் விளையும் கிலேசம் சற்றுமற்று ஆனந்தமயமாயிருக்கிறோம். விழிப்பு நிலைமையிலும் அவ்வாறே அகந்தை எழுச்சி அற்றிருந்தால் துன்பமெதுவும் தோன்றாது. ஒரே ஆனந்தமயமாய் இருக்கலாம். அதுவே ஆத்மானுபூதி.*

*[ஸ்ரீ ரமண மஹர்ஷியின் பொன்மொழிகள்-பக்.168- பதிப்பு 2004] ஸ்ரீ பக: எப்போதும் உள்ள தூய உணர்வு ஆனந்தமயமாகவே இருக்கிறது. இருப்பு, உணர்வு, ஆனந்தம் என்னும் இம்மூன்றும் ஒன்றே. அந்த ஒன்றே நாம். அதுவே நாமாக இருந்தும்கூட, அறியாமையினால் 'தெரியவில்லையே' என்று வருந்துகின்றோம். ஆகவே, இவ்வறியாமை என்னும் பிரதிபந்தத்தை அகற்றினால் ஆனந்தமயமாம்.*

---

# ரமணோதயம்

## Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# பிரம்ம ஞானிகள்

## எஸ். கோவிந் சுவாமிநாதன்

பிரம்ம ஞானிகளில் ஒருவர் தனக்குத்தானே நைவேத்யம் செய்து கொண்டார். ஒருவர் தன் தலையிலே பூவைப் போட்டுக்கொண்டு தனக்கே அர்ச்சனை செய்து கொண்டார். ஒருவர் கடவுளுக்குப் படைக்கும் நைவேத்தியத்தைத் தானே சாப்பிட்டு அதை எச்சில் படுத்தினார். ஒருவர் தன் ஸ்தோத்திரத்தைத் தானே பாடிக் கொண்டார். இந்த விசித்திரத்தைப் பார்ப்போம்.

பகவான் ரமண மகரிஷிகள் மலையில் வாசம் செய்த காலம். அன்று விஜயதசமி, பகவானைத் தரிசித்துத் தேங்காய் உடைத்து பகவானுக்கு நைவேத்தியம் காட்ட வேண்டும் என்று லட்சுமி அம்மாள் மலைக்கு வந்தார். இந்த லட்சுமி அம்மாள் இளவயதில் திருச்சுழியில் பகவானோடு விளையாடியவர்.

கையில் தேங்காயுடன் வந்த லட்சுமி அம்மாள் தேங்காயின் நாரைப் பிய்க்க ஆரம்பித்தார். இதைப் பார்த்த பகவான், "லட்சுமி, நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

லட்சுமி அம்மாள், "பகவானே! இன்று விஜயதசமி, தேங்காய் உடைத்து தங்களுக்கு நைவேத்தியம் செய்ய வந்திருக்கிறேன்" என்றாள்.

பகவான், "தேங்காயை இங்கே கொண்டு வா" என்று கூறி, தேங்காயை வாங்கி அதன் நாரையெல்லாம் தானே பிய்த்து சுத்தம் செய்து, அதை உடைத்து தனக்குத்தானே நைவேத்தியம் செய்து கொண்டார்.

பகவானின் இந்த விசித்திரச் செயலைப் பார்த்து லட்சுமி அம்மாள் அதிசயித்து நின்று விட்டார். தனக்குத் தானே நைவேத்தியம் செய்து கொண்ட பரப்பிரம்மம் பகவான்.

★★★

இதைப் போலவே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தட்சிணேஸ்வரத்தில் பவதாரிணி காளிக்குப் பூஜை செய்யும்போது, தம்மையே காளியாக பாவித்தவராய் தமது தலையில் தாமே புஷ்பத்தைப் போட்டுக் கொண்டார். இவர் ஒரு பரப்பிரம்மம்.

★★★

சைதன்ய மகா பிரபு 'நாடியாவில்' அவரது வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளி கிருஷ்ண விக்ரகத்திற்கு எனத் தயாரித்த நைவேத்தியப் பலகாரங்களைத் தானே சாப்பிட்டு அதை எச்சில் படுத்திவிட்டார். அப்போது சைதன்யருக்கு வயது மூன்று. விருந்தாளிப் பிராம்மணர் மீண்டும் நைவேத்தியப் பலகாரங்களைத் தயாரித்தார். அதையும் குழந்தை சைதன்யர் எச்சில் படுத்திவிட்டார். இப்படியாக மூன்று முறை நைவேத்தியப் பலகாரங்களை எச்சில் படுத்தியபின், அந்த பிராம்மணருக்கு கிருஷ்ண தரிசனம் தந்து, தானே கிருஷ்ண ஸ்வரூபம் என்பதைக் காட்டினார். இவரும் ஒரு பரப் பிரம்மம்.

★★★

தஞ்சை ஸ்ரீ ஞானகி மாதா ஆச்ரமத்தில் பெண் அடியார்கள் அன்னை ஸ்ரீ ஜானகி மாதாவைத் தரிசித்து அவரை ஸ்தோத்தரித்துப் பாடல்களைப் பாடுவார்கள்.

ஒருமுறை ஸ்ரீ அன்னையின் திருமகள் ஸ்ரீமதி சாரதா, "அம்மா நீ அருணை ரமணரின் அழியாத உருவன்றோ" என்ற பாடலைப் பாடும்போது அன்னையும் தலையை அசைத்துத் தானும் சேர்ந்து பாடினார்.

இதைக் கேட்ட ஸ்ரீமதி சாரதா, அதிசயப்பட்டு வேடிக்கையாகக் கூறினார், “அம்மா மேலே போட்ட பாட்டை அம்மாவே பாடுகிறார்”. ஸ்ரீ அன்னை புன்னகை பூத்தவாறு பாட்டைத் தொடர்ந்து பாடினார். அன்னை ஒரு பிரம்மஞானி.

*பிரம்ம ஞானிகளுக்கு நீ, நான் என்ற பேதமில்லை*

*அவர்களுக்கு அன்னியமாக ஒன்றுமில்லை*

*பிரம்ம ஞானிகளின் நிலை எப்படிப்பட்டது?*

*பகவான் ஸ்ரீ ரமணர் கூறுகிறார்:*

*“அவர் நிலைமையம்மா! இன்னதென்று உன்னல் எவன்?”*

*ஸ்ரீ அன்னை கூறுகிறார்:*

*“மதிக்க முடியாதவர் மகிமை - நம்மால்*
*நினைக்க முடியாதவர் நிலைமை”*

*கைவல்ய நவநீதம் கூறுகிறது:*

*“பிரம்ம ஞானிகள் பிரம்மா, விஷ்ணு, சிவன் - ஆகிய மும்மூர்த்திகளுக்குச் சமமாவர்.”*

இப்படிப்பட்ட பிரம்ம ஞானிகளை வழிபட்டு நாம் உய்யும் வழி தேட வேண்டும்.

---

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| *திரு* | *சுப்ரமணியம், ஆதம்பாக்கம்* | 500 |
| *திரு* | *டி.ஆர்.சி. சேகர், வில்லிவாக்கம்* | 500 |

# ரமண வழி வெண்பாக்கள்

## க்ரேஸி மோகன்

*வினையால் அணையும் பெயரும் புகழும்*
*எனையாள லாமோ ரமணா! - தனியாய்*
*அணையாத ஆன்ம அகலாய் ஜொலிக்க*
*நினைவாகும்; நீயே நெருப்பு* (11)

*நால்வர் பொறுப்பேற்று நாமே தலைமுதல்*
*கால்வரை தூக்கி கனக்கின்றோம் - மால்வினை*
*தேடல் விசாரத்தில் கூடிக் களிக்கும்முன்*
*ஊடல் உணர்வே உடல்* (12)

*(மால்: மயக்கம் மாயை; ஊடல்=பொய்க் கோபம்; ஆன்ம விசாரத்தினால் நான் யார் என்றுதேடி அறியும்வரை பொய்யுணர்வாய் இருப்பதே உடல்)*

*எடுப்பார்கைப் பிள்ளை எதிர்ப்போர்க்குத் தொல்லை*
*எடுத்துரைக்கப் போனால் இல்லை - கொடுப்பாய்*
*திருடன் மனக்கையில் தேடலாம் சாவி*
*திருடன் புருடனாய்த் தேர்வு* (13)

*(திருடனாய்த் திரியும் மனத்தினிடம், ஆத்ம விசாரம் என்னும் சாவியைத் தந்து, மனக் கதவைத் திறக்கச் செய்தால், திருடன் புருஷன் (பரமாத்மா ஆகப் பரிணமிக்கிறான்)*

*உச்சரிக்கும் மந்திரம் உற்பத்தி ஆகுமிடம்*
*எச்சரிக்கை யோடுபார்க்க ஏகாந்தம் - நச்சரிப்பாய்*
*நானில்லை என்ன, நமதில்லை என்ன,பின்*
*ஜாண்பிள்ளை ஆன்மா ஜனிப்பு* (14)

*(அகங்கார, மமகாரத்தை விட்டு நீங்க இடையறாய் விசாரம் செய்க. பகவான், ஸனகாதி முனிவர்க்குக்*

கூறியதுபோல் மந்திரம் தோன்றும் இடத்தைத் தேடுக. அப்போது பரமஞானம் தோன்றும்)

*பார்ப்பான் அகத்தில் புலித்தோல் பசுவாக*
*ஆர்ப்பரிக்கும் ஆணவத்துள் ஆன்மனாய் - தோற்பான்*
*அவனே ஜெயிப்பான் அவனே சமர்த்த*
*சிவனே அருணா சலத்து* (15)

*கயமை அகந்தை கடமை பலனை*
*நயமுறக் கூறி மயக்கும் - சுயமாய்*
*இருந்த இடத்தில் பொருந்தி இருந்து*
*அருந்து அருணா சலம்* (16)

*முப்பதில் வாழ்க்கையில் மூப்பதில் மூழ்கையில்*
*அப்பவும் இப்பவும் ஆசைதான் - தப்பிட*
*மேனி நமதென்ற மாய மனப்படி*
*ஏணியில் ஏறா(து) இது* (17)

(இள வயதிலும், மூப்பு வந்தபோதும் ஆசை நம்மை விடுவதில்லை. இதிலிருந்து தப்ப, 'நான்தான் உடல்-உள்ளம்' என்ற மாய ஏணியால் ஏறாமல் நான் ஆன்மாவே என்று உணர்ந்து இது).

*உட்புகும் உள்ளம் உணரும் உவகையை*
*கட்புலனை கைகோர்க்கும் காயமாம் - மட்பாண்டம்*
*நோயில் ஒடுங்கிபின் பாயில் முடங்கிடும்*
*தாயில்லா சேயாய்த் தவித்து* (18)

*(கட்புலன்=காட்சி; காயம்=உடல்)*

*சயனத்தில் தோன்றுகின்ற சொப்பனத்தை மூடும்*
*நயனத்தால் காண்கின்ற நானார் - அயனொத்து*
*தூக்கம் கனவு விழிப்பைப் படைத்திடும்*
*போக்கே மனதின் பழுது* (19)

(அயன்=பிரம்மன். பிரம்மன் உலகினைப் படைப்பதுபோல், நாமும் நம் மன எழுச்சியால் காண்கின்ற உலகைப் படைக்கிறோம். இவ்வுலகம் தூக்கத்தில் உள்ளே ஒடுங்குகிறது.)

*ஆவிற்(கு) ஒருகோயில் ஆயிக்(கு) ஒருகோயில்*
*காவிக்குள் வாழ்ந்த கிரஹஸ்த்தா - சாவிற்கே*
*சஞ்சலம் தந்த சமர்த்த ரமணரே*
*தஞ்சமுன் பாதம் தயவு (20)*

*(ஆ=பசு (லட்சுமி), ஆயி=தாய் அழகம்மை*

*வானகம் வீழ்ந்தாலும் வையகம் ஓய்ந்தாலும்*
*நானகம் தோயநவ நீதமாம் - கானகம்*
*போகதே கண்மூடி சாகா வரம்காண*
*வாகா னதாம்ரமண வழி... (21)*
*(நவநீதம்=ஞானமாகிய வெண்ணெய்)*

*நந்த வனம்மாயை நாலாறு மாதம்பொய்*
*வந்ததோர் ஆண்டி வெறும்புளுகு - விந்தையை*
*வீணே ரசிக்கும் விளையாட்டு ஓயமனம்*
*காணோம் எனஓடும் காண்... (22)*

*கண்டது காயாம் கவர்ந்தற்று, கைகூப்பி*
*கண்டதை விண்ட கனிரமணர் - உண்டதில்*
*சோறுண்டு மெல்ல சுகப்பானை விட்டான்ம*
*ஊரொன்றில் உய்யும் உயிர்... (23)*

*வினையளவு கர்மம் தினையளவு தேடல்*
*பனையளவு ஆனந்த பானம் - முனையளவு*
*ஊசி நிலத்திலும் உல்லாச வாசியாம்*
*வாசி ரமண வழி... (24)*

*கள்ளதில் போதையாய் கண்ணனில் ராதையாய்*
*உள்ளதே ஆன்மா உணர்ந்திடு - உள்ளது*

*நாற்பது சொன்ன நமது ரமணனை*
*ஏற்பவர்(க்கு) இல்லை இறப்பு...* *(25)*

*உடலுறவு கொண்டு உணர்வை மறைக்கும்*
*மடமனதின் மாயா வினோதம் - அடஅதை*
*அப்படியே ஏற்று அருணா சலரமணன்*
*சொற்படி செல்ல சுகம்...* *(26)*

*காண்போன் அழிய ககனம் ஒழிந்திடும்*
*நான்போய் உதிக்கும் நமச்சிவாயம் -ஆண்பெண்*
*அபேதம் அதையுணர்ந்து ஆன்ம வெளியில்*
*உபாதிகள் அற்று உலவு...* *(27)*
*(ககனம்=வானம், மனவெளி)*

*எதிராக வந்த எமனை எதிர்த்து*
*பதினாறில் வென்ற பகவான் - பதிலாக*
*“நானார்” வினாவை நமக்களித்தார் நாமுய்ய*
*தேனாறான் மாவில் திளைத்து...* *(28)*
*(தேன் ஆன்மா=ஆனந்தமயமான ஆத்மா)*

*அய்யே அதிசுலப ஆன்ம விசாரணையை*
*கையில் கனியாய் கவர்ந்தவராம் - அய்யன்*
*ரமண வழியில் ரகசியங்கள் இல்லை*
*நமனே துணையாம் நமக்கு...* *(29)*

*உடலதற்(கு) இல்லை உபாதிகள், ஆன்ம*
*கடலதற்(கு) இல்லை கரைகள் - வடிவெடுத்து*
*வந்துவந்து போகும் வினையுரு வானவன்*
*தொந்தரவு நெஞ்சைத் துரத்து...* *(30)*

*மானாபி மானம் மதிநுட்பம் மாட்சிமைகள்*
*நானாகி வந்த நயவஞ்சம் - தானாகி*
*தன்னந் தனியாய் தவத்தில் திளைப்பவர்க்கு*
*எண்ணம் எதிலே எதற்கு...* *(31)*

*மனோமயம் ஆளும் மமதை அரசன்*
*கனாநனா காணும் குடிகள் - வினாவிட*
*பூஜ்ஜியம் தோன்றிடும் ராஜ்ஜியம் ஆகிடும்*
*"நான்"ஜெயம் ஆன்மா நிகழ்வு...* (32)

*குப்பன்தன் சொப்பனத்தில் சுப்பனாய் மாறுகிறான்*
*குப்பென வேர்த்து விழிக்கின்றான் - தப்பிதில்*
*குப்பனாய் சுப்பனாய் கோலங்கொள் நானைநீ*
*துப்புர வாக்கத் தெளிவு...* (33)

*தீதாளும் நெஞ்சு திரையிட்டு மூடிடும்*
*பாதாள லிங்க பரவசத்தை - வேதாந்தம்*
*செப்பரிய ஆன்மாவை சோதித்(து) அளித்தனன்*
*அப்பளப் பாட்டில் அடைத்து...* (34)

*ரமண ஜயந்தி அன்று எழுதியது*
*அருணா சலமமர்ந்த ஆதிரைக்குப் பின்னே*
*மறுநாள் பிறந்த முனியே - திருநாள்*
*ஜயந்தியில் மீண்டும் ஜகத்தின் மரண*
*பயந்தீ அணைக்கப் பிற...* (35)

*முற்றும் உணர முழுதும் துறவதில்*
*சற்று குறைந்தாலும் சம்சாரம் - பற்றில்*
*ஒருகாலும், சத்தில் ஒருகாலும் வைப்போர்*
*ஒருகாலும் காணார் ஒளி...* (36)

*(ஆத்மசாதனை ஒரே நோக்குடன் இடையறாது பயில வேண்டும். உலகத்துடன் பற்று வைத்து அதேசமயம் ஆன்ம சாதனையும் செய்யலாம் என்று எண்ணுபவர்க்கு ஞானம் உதிக்காது).*

*வெள்ளித் திரைக்கு வரலாமோ வெட்கம்தான்*
*கள்ளத் தனமான காட்சிகளாகல் - உள்ளத்*
*திரையதில் தோன்றி மறைகின்ற(து) எல்லாம்*
*கரைவந்து மாயும் திரை...* (37)

*தானாய்ப் படர்க்கையாம் தன்மையின் முன்நிலை*
*நானாய் ஒளிந்திடும் நம்மகந்தை - தூணாம்*
*அதனை உதைக்க அரியுரு வான*
*முதலாய் உதிக்கும் முடிவு...* *(38)*

*ஊணறியா, ஓடும் உயிரறியா, உள்ளுறையும்*
*கோனறியா வண்ணமுன் கண்மூடும் - நானறிய*
*வெள்ளமாய் வெண்பா வடித்த ரமணரின்*
*உள்ளது நாற்ப(து) உரைத்து...* *(39)*

*முகமது தேடும் மலைபோல ஆன்ம*
*அகமதில் வாழும் அருணை - புகலாய்*
*இருந்த இடத்தில் இறைவனைக் காண*
*விரைந்து வருமாம் விழிப்பு...* *(40)*



# மரணம் மதுரம்

## சு.பரமேஸ்வரன், கோவை

தொடர்ச்சி....

**மரணபயம் நீக்கும் மூவா மருந்து:**

உலகில் எப்படி மகிழ்வோடும் சகல வசதிகளுடன் வாழ்வது என்று அறிவதுதான் முக்கியம் என எண்ணுகிறோம். ஆனால் எப்படி மகிழ்வோடு இறப்பையும் எதிர்கொள்வது என்பதும் அதைவிட முக்கியமானது. இவ்வுலக வாழ்வில் எல்லா வகைத் துன்பங்களும் கட்டாயமாக இருக்கும். அவற்றை விலக்கி வாழ இயலாது. துன்பங்கள் மனதைக் கலக்காதபடி, அதைப் பண்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். உடலைப் பாதிக்கும் நோய் எதுவானாலும் அதற்கு மனமே காரணம். காமம், கோபம், விருப்பு, வெறுப்பு ஆகியவற்றிக்குக் காரணம் மனமே.

மனநோய் யாவருக்கும் உண்டு. மகான்களால் கூறப்படும் மறுபிறவி, கர்மவினை, இறவாமை, பிறவாமை இவற்றையெல்லாம் படிக்கும்போதும், நம் மனத்திற்குள் சந்தேகமும், அவநம்பிக்கையும் ஏற்படுவது சகஜம். நமக்குத் துன்பம் வந்தபோது நம் ஆழ்மனதில் இவையெல்லாம் ஒருவேளை உண்மையாக இருக்குமோ என்ற எண்ணம் தோன்றும். ஆக ஒன்று அவநம்பிக்கை; அதன் விளைவான பயமும் அதன் அடிப்படையிலான பக்தியும் என்ற இருநிலைகள் தாண்டி ஆன்மிகத்தில் வேறு வகையில் சிந்திப்போர் சிலரே. இறைவழிபாட்டினால் கிடைக்ககூடிய பலன்கள் என்ற நினைப்பில் சிலரும், இறை மறுப்பால் வரக்கூடிய துன்பங்கள் என்ற நினைப்பில் பலரும் வழிபாடு செய்கின்றர். மறை நூல்களும், அருளாளர்களது

மெய்மொழிகளும், அவைகளின் உட்பொருளைச் சுருக்கமாகச் சில வார்த்தைகளிலும் வெளிப்படுத்தலாம்.

தெளிவாகத் தெரிந்தால் சித்தாந்தம் - அது
தெரியாமற் போனாலோ வேதாந்தம்.

என்பார். மனம் என்ற சொல்லை எல்லோரும் பொதுவாக உபயோகிக்கின்றனர். அதைப் புரிந்து கொள்ளாதவர்களும், தவறாகப் புரிந்து கொண்டவர்களும் அரைகுறையாகப் புரிந்து கொண்டவர்களும் உள்ளார்கள். அதனால்தான் அநேக தத்துவ முரண்பாடுகள் வாதப், பிரதிவாதங்கள் எழுகின்றன. மனமே, ஜீவன், சித்தம், பகுத்தறிவு, ஆன்மா, நுண்உடல் என பல்வேறு பெயர்களில் அறியப்படுகிறது. தோற்றங்கள் அனைத்தும் மனத்தின் உருவாக்கங்களே என்று உணர்ந்து, பற்றற்று சமநிலை எய்துகின்றபோது ஒருவர் மெய்ஞ்ஞானம் பெறுகின்றார். சாவைப் பற்றிய பயம் அற்றுப்போகிறது. நாம் கனவு காணும்போது நல்ல கனவுகளை மகிழ்வுடன் அனுபவிக்கிறோம். கெட்ட கனவு வந்தால் உடனே விழிப்படைந்து சீ - கனவு என்கிறோம். இவ்வுலக வாழ்வில் திருப்தி, மகிழ்ச்சி உள்ளவரை தன்னைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படாது. அருள்தாகம் ஏற்பட்டால் ஆன்மிக வாழ்வு துவங்கும்.

எத்தனைதான் கற்றாலும், எத்தனைதான் கேட்டாலும்
எத்தனை சாதித்தாலும் இன்புறா - சித்தமே
மெய்யாகத் தோன்றிவிடும் உலகவாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்றாத போது

- சிவபோக சாரம்

இறப்பு, மூப்பைக் கண்டவுடன் புத்தருக்கு அத்தகைய அருள்தாகம், விழிப்புணர்வு ஏற்பட்டு சத்தியத்தைத் தேடிப் புறப்பட்டார். இறுதியில் மரணத்தை வென்று மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்றார். இன்று பல முதியோர்களின் இதயகீதமே யாருக்கும் தொல்லை

இல்லாமல் சீக்கிரம் போய்விட வேண்டும் என்பதே. மயான வைராக்கியம், பிரசவ வைராக்கியம் எனப் பொதுவாக எல்லோருக்கும் உண்டு. விறகு விற்கும் ஒரு ஏழைக் கிழவி இருந்தாள். உதவிக்கு யாரும் இல்லை. பாரம் சுமப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்த நிலையில், எவ்வளவு நாள் கூப்பிட்டாலும் இந்த எமன் வரமாட்டேன் என்கிறானே? என்று சதா புலம்பிக்கொண்டே இருந்தாள். ஒரு நாள் எமன் நேரில் வந்து ஏ கிழவி ஏன் என்னைக் கூப்பிட்டாய்? என்றான். கிழவி பார்த்தாள், இது என்னடா இவன் நிஜமாகவே வந்துவிட்டானே? என மனதில் நினைத்துகொண்டே அது ஒன்றுமில்லை ராசா, இந்த விறகுக் கட்டை தூக்கி தூக்கி மிகவும் சிரமமாக உள்ளது, இந்தக் கட்டையை சற்று என் தலையில் தூக்கி வை போதும் என்றாள். போன பிறவியில் நாம் என்ன தீர்மானம் செய்தோமோ, அதுவே இப்பிறவியில் அனுபவம். ஆனால், எந்த முடிவும் குறிக்கோளும் இல்லாமல் இறப்பவர்களே மிக அதிகம். நம்மிடம் உண்மையான குருபக்தி, பண்புகள் இல்லாதவரை நல்ல முடிவுக்கு எப்படி வர இயலும்?

இறவாமை என்பது எல்லா உயிர்களிடத்தும் உண்டு. பண்டிதர், பாமரர் என எல்லோரிடத்தும் உள்ளொளி எனும் பேருணர்வு - இறவாமை உண்டு. எள்ளிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. ஆனால், எள் விதைகளை அரைக்காமல் எண்ணெய் கிடைக்காது. பாலில் வெண்ணெய் இருக்கிறது. ஆனால், பாலைத் தயிராக்கி கடையாமல் வெண்ணெய் எடுக்கமுடியாது. ஆக நாம் மரணத்திற்குப் பின்பு ஏற்படும் மாற்றத்திற்கு நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்வதும் முக்கியமாகும். மனித வாழ்க்கையில் எந்த நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு வாழ்கிறோமோ, எந்த ஆசைக்காக பெருமுயற்சி செய்கிறோமோ, அவைகளின் சிந்தனையே மரண காலத்திலும் ஏற்படும். மரணகாலத்தில் எந்த எண்ணம் நினைவிற்கு வருமோ,

அதுவே மறுபிறவிக்கு அடித்தளமாக அமையும். கிருஷ்ணர் கீதையில் கூறியது,

சாகும் தருவாயில் நீ என்னையே கருத்துடன் நினைத்தால் என்னையே அடைவீர் என்பதாகும்.

ஒருவர் கொடிய பாவியானாலும் தனது இறுதிக் காலத்தில் இறைசிந்தனை ஏற்படுமானால் அதுவே அவன் செய்த புண்ணியமாகும். பகவானது ஸ்மரணையால் பாவங்கள் நசிந்துவிடும். இதற்கு உதாரணம் பாகவதத்தில் வரும் அஜாமிளனின் கதை. மரண காலத்தில் இறைசிந்தனை வரவேண்டுமானால், அது முன்பே பழக்கத்தில் வந்திருக்க வேண்டும். சிந்தனைகளைப் புலன்களின் வழியே செல்லவிடாது மனதை இதயத்தில் நிறுத்தி தியான நிலையில் உடலை விடுதல் சிறப்பானதாகும். கோமா என்னும் மயக்க நிலையில் இறப்பவர்களுக்கு அவர்கள் செய்த உபாசனைகளின்படி பிறவி ஏற்படும். துன்பங்களைக் கண்டு பயந்து தற்கொலை செய்து கொண்டவர் கடுமையான தண்டனையுடன், அலகையாக வேறு ஒரு உடலுக்கு வெகுகாலம் ஏங்கித் திரிய வேண்டும்.

எது வரினும் வருக, எது போயினும் போக
இணையடி மறவாத நிலையொன்று மாத்திரம்

எனக்கருளுக வேண்டும் என்ற வள்ளல் பிரானின் வாக்கிற்கு ஏற்ப, தீயவை போக இறையருளை வேண்டுவோம். நமக்குள்ளே ஒரு விதமான பயம், பீதி, அச்ச உணர்வு எப்போதுமே உள்ளது. அதீத பற்றே எல்லாவிதமான பயங்களுக்கும் அடித்தளமாக உள்ளது. ஒன்றைப் பெறவேண்டுமானால் ஒன்றை இழக்க வேண்டும். இது இயற்கையான நுட்பம். எதையும் இழக்க மாட்டேன், ஆனால் எல்லாவற்றையும் பெற வேண்டும் என எண்ணுவது அறியாமை. தூய்மையாக வேண்டும் என நினைத்தாலே போதும் மனம். எண்ணம் எல்லாம் தூய்மையாகி விடும். எல்லாம் எண்ணத்தால்

வந்த விளைவு தானே? ரமணரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாக உள்ளது. அதில் நாம் காண்பது:

ரமணர் அன்பு, பரிவு காட்டாத உயிரினங்களே இல்லை எனலாம். பசு, பாம்பு, பறவை, அணில், மான், குரங்கு, நாய், மற்றும் செடி, கொடி, மரம் என பட்டியல் நீண்டு கொண்டே போகும். திருடர்களால் தாக்குண்ட போதும், ஒரு அன்பர் தம்மீது அவதூறு பிரசாரம் செய்தபோதும் அவர்களிடம் காட்டிய அகிம்சை நெறி, அன்பு பக்தர்கள் அறிந்ததே. உலகத்தில் உள்ள யாவற்றையும் ரமண பகவான் தன் பிரதி பிம்பமாகவே கண்டார். யாரிடமும் எதையும் கேட்கவில்லை. அதற்குத் தேவையும் இல்லை. ஆனால் எல்லோருக்கும் தானமாக அருளை, அன்பை வாரி, வாரி வழங்கத் தவறவில்லை.

தூசியைக் கூட மதித்து உபயோகிக்கத் தெரிந்திருக்க வேண்டும்; அதே சமயம் அகில உலகத்தையும் தூசி எனத் தள்ளவும் தயாராக இருக்க வேண்டும் என்று ஒரு அன்பருக்கு உபதேசித்தார். கோவணாண்டியாக இருந்துகொண்டே எல்லாச் செல்வங்களையும்; உடைமைகளையும் பெற்று இருந்தார். அப்படியென்றால்? நன்றியுடைமை; அருளுடைமை; பொறையுடைமை; அறிவுடைமை; அன்புடைமை; ஒழுக்கமுடைமை; சான்றான்மை; நடுவுநிலைமை; என எண்வகை செல்வங்களையும் பெற்று; ஆழிசூழ் உலகாளும் அரசனுக்கும் அரசனாக; ஏழையாக; எளியவர்க்கும் எளியவராக நம்முன் 54 ஆண்டுகள் வாழ்ந்த வாழ்வு சத்யமே பொய்யோ? மெய்யோ?!

மேலைத் தவத்தளவே ஆகுமாந்தான் பெற்ற செல்வம்

என்ற அவ்வையின் திருவாக்கு இங்கு சிந்திக்கதக்கது.

*அருளே நம்மியல், அருளே நம்உரு*
*அருளே நம்வடிவு; ஆம் என்ற சிவமே*
*அருளே நம் அடி; அருளே நம் முடி*

*அருளே நம் நடுஆம் என்ற சிவமே*
*அருளே நம் அறிவு... ...*
*அருளே நம் பொருள்; அருளே நம் ஒளி;*
*அருளே நம் குலம்; அருளே நம் இனம்;*
*அருளே நாம் அறிவாய் என்ற சிவமே*

என வடலூர் வள்ளல் பிரான் பாடலுக்கு இலக்கணமாய், கருவாய் வாழ்ந்து காட்டியவர் ரமண பகவான் என்று சொல்லவும் வேண்டுமோ? இத்தகைய குணநலன்கள், இறவாமை எனும் சித்தி பெற்ற ரமண மகேஸ்வரனது திருவடிகளை எப்போதும் சிந்திப்போருக்கே மரண பயம் அற்றுப் போய்விடும். மரணம் மதுரம் ஒரு சுகானுபவம் என உணர்வர்.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; நினையாது
ஒருபோதும் இருந்தறியேன்

என்ற அனுபவ நிலை சீடனுக்கு வந்தபிறகு, குருவின் தூலத்தைக் காண வேண்டும். அவரிடம் உரையாட வேண்டும் என்ற தேவையில்லாமல் போய்விடுகிறது. சீடனின் நினைவில் குருவந்து அமர்ந்துவிட்ட பிறகு இரண்டற்ற நிலை. அதுவே அகம் ப்ரம்மாஸ்மி.

மரணம் மதுரம் - மரணம் மதுரம் என சதா சிந்தத்தால்கூட இறுதியில் ஒரு நாள் மரணம் என்பதில் உள்ள ”ம' காரம் இடம் மாறி ரமணம் மதுரம் என ஒரு மந்திர ஒலியாக உள்ளத்தில் ஒலிக்கும். ஒரு வேடன் மரா, மரா, என சதா சிந்தித்து வால்மீகி ரிஷியாக மாறிய சரித்திரம் உள்ளதே?! 'மரணம் மதுரம்' என ஓத, ஓத, அது ரமணம் மதுரம் என ஆவது கண்கூடு, வாசியும், சித்தமும் ஒன்றாகும் நிலை.

சிந்தித்தல் என்பதில் ஒரு நுட்பம் உள்ளது. சிந்தித்தல் என்றால் மந்திரத்தை வாய்விட்டு சொல்வது அல்ல, உதட்டால் மெல்லென சொல்வதும் அல்ல. அது ஒரு வித பாவனை. சிந்தித்துக்கொண்டே அம்மயமாயிருத்தலைக் குறிக்கும். நம் மூச்சக்



காற்றுடன் இயல்பாய் ஒன்றிவிடும், இன்னிலையில் மரணமேது?! பயம்தான் ஏது?! இதுவே மூவா மருந்து. சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து. ரமணம் அருள் வடிவான மருந்து. நாவிற்கினிய மருந்து; நம்முள் அற்புதமாக அமர்ந்த மருந்து.

"பிறவா நெறிதந்த பேரருளான்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதி பராபரன்
உறவாகி வந்தென் உளம் புகுந்தானே."

- திருமந்திரம்

(நிறைவுற்றது)

# ஜெகதீச சாஸ்திரிகளின் சரணாகதி ஸ்தோத்ரம்

## (சமஸ்கிருதத்தின் தமிழநுவாதம்)

திருச்சுழி உதித்த தேவா சரணம்
ஆலவாய் விளையாடி சரணம்
அருணை சாரல் அமர்வோய் சரணம்
சாதுவே தவத்துயர் சரித்தோய் சரணம்

1) பிரமன் முதலா எறும்பீறாகச் சமமாய் உள்ளோய் சரணம் சரணம்
அறுபகை யோரை அழித்தோய் சரணம்
சருவ விஞ்ஞான சாரமே சரணம்
எல்லையில் கருணைச் செல்வா சரணம்

2) பேருருவகத் தினும் பெரியோய் சரணம்
உலகுக்கு அப்பால் உள்ளதாம் என்று மறைகள் போற்றும் பொருளே சரணம்
பற்றுங் காலக் கராவின் பயமறக் காலனை காய்கடுங் காலா சரணம்

3) புலன்வழி விளையும் துன்பம் போக்க, அறிவுருத் தாங்கி அணைந்தோய் சரணம்
காம அகந்தைக் காய்ச்சலைக் காயக் காமாரி லீலா காயனே சரணம்

4) பிறப்பு முதலே பிரம சரிய, விரதம் பூண்ட வித்தகா சரணம்,
தண்ட கமண்டலம் தரித்தோய் சரணம்
பிரமா சனத்யான நிரதா சரணம்
பரமாய் அமர் யதியே சரணம்

5) அரனே சரணம் அஜரா சரணம்
சுதந்திர வீடாய்த் துலங்குவோய் சரணம்
அளப்பரும் ஆற்றல் அமைந்தோய் சரணம்
விமலவிஞ் ஞான விசேடா சரணம்

6) துன்பமுத் தாபந் தொடர்வினை மோக, சந்தாபங்களுக்கு அந்தகா சரணம்
சத்யசங்கல்ப பாபஞ் சாரா, ஆப்தகாமா அசோகா சரணம்

7) அன்பர் மனதை தெளிவிப்போய் சரணம்
புன்னகை பூத்துப் பொலிவாய் சரணம்
துன்பம் அனைத்தும் தொலைத்தே இன்ப நல்கும் ரமண நன் னாமாசரணம்

8) சிவமே சரணம்; சிவங்கர சரணம்; குருவே சரணம் நற்குன்றே சரணம்
என்னிதயாம்தேயம் இருப்பாய் சரணம்; எவைக்கும் அடைக்கல ஈசா சரணம்

9) நலன் வேண்டுவ வேண்டுவார்க்கு எந்தை எனுமெய் உணர்ந்த எம்மனோடுமல்லா,
அத்தகை குணநலம் அடைதற் பொருட்டுக் குரவன் ரமணனைச் சரணடைவீரே

# இனிவரும் திருநாட்கள் - 2015

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் | 16 | திங்கள் | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| | 25 | புதன் | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 27 | ஞாயிறு | ஸ்ரீ பகவானது 136ஆவது ஜயந்தி |

## 2016

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 15 | வெள்ளி | பொங்கல் |
| | 23 | சனி | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 27 | சனி | சுந்தரம் ஐயர் தினம் |
| மார்ச் | 7 | திங்கள் | மஹா சிவராத்திரி |
| | 18 | வெள்ளி | ஸ்ரீ வித்யா ஹோமம் |
| ஏப்ரல் | 8 | வெள்ளி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 14 | வியாழன் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 15 | வெள்ளி | ஸ்ரீராம நவமி |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

# அக்ஷர மண மாலை – ஒரு தத்துவக் கருவூலம்

## பகுதி - 1

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வேதகாலம் உலக வரலாற்றில் மகோன்னதமான காலமாக அமைந்தது. சிறந்த நெறிகளோடு வாழ்ந்த அச்சமுதாயம், உயர்ந்த தத்துவக் கருத்துக்களையும் படைத்தது. உபநிஷதங்கள் என்ற பெயரில் வழங்கப்பட்ட இவை, உன்னதமான ஞான மார்க்கத்தை மக்களுக்கு விருந்தாகப் படைத்தன. பிரம்ம சூத்திரம் இக்கருத்துகளையே சுருக்கமான சூத்திரங்கள் வாயிலாக அமைத்து அளித்தது. பின்னர் தோன்றிய பகவத் கீதை கர்ம-பக்தி-ஞான மார்க்கங்களைத் தெள்ளத் தெளிவாக மக்களிடையே பரப்பியது. இவை மூன்றும் சேர்ந்து 'பிரஸ்தான த்ரயம்' என்று வழங்கப்பட்டன. நம்முடைய வேதாந்தத்தின் சாரமாக இவை ஞான மார்க்கத்தைப் பரப்பின.

நாளடைவில் ஞான மார்க்கத்துடன் பக்தி மார்க்கமும் மக்களிடையே பரவத் தொடங்கியது. குறிப்பாகத் தென்னாட்டில் சான்றோர் பலர் தோன்றி பக்திப் பயிரை செழிப்படையச் செய்தனர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஊர்தோறும் சஞ்சாரம் செய்து அன்பு வழியைப் பரப்பினார்கள். நாட்டையாண்ட மன்னர்களும் மாபெரும் ஆலயங்களை எழுப்பி, ஆன்மிகத்தை வளர்த்தனர். மக்களின் தினசரி வாழ்வில் இறையுணர்வு ஒரு இன்றியமையாத பகுதி ஆயிற்று.

இந்தக் காலகட்டத்தில்தான் இந்தியாவில் வெளிநாட்டினர் ஆதிக்கம் தலை தூக்கியது. மாற்றுக்

கருத்துகள் வலிமை பெறத் துவங்கின. பாரத நாட்டு மக்களே நாட்டுடைய பக்தி-வேதாந்தக் கருத்துகளை சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் துவங்கினார்கள்.

இந்த சோதனையான காலகட்டத்தில்தான் ஸ்ரீரமணர் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றினார். இவர் படைத்த நூல்கள் நம்முடைய மனதில் தோன்றும் ஐயங்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைந்துள்ளன. பாரதநாட்டின் பல்வேறு தத்துவங்களையும் இணைக்கும் பாலமாக இவை விளங்குகின்றன. பல நூற்றாண்டுகளாகப் பல்கிப் பரவி வந்த சித்தாந்தங்களை எளிதாகப் புரிய வைக்கும் நற்பணியை இவர் செய்தார். இதன்மூலம் இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளாகத் தடையற விரவி வந்த வேதாந்தத் தொடர்பை (Spiritual continuance) இவர் தெள்ளத் தெளிவுற நமக்கு எடுத்துரைத்தார்.

ரமணமகரிஷி முறைப்படி கல்வி பயின்றவர் அன்று. 'அருணாசல' என்ற உந்து சக்தியால் கவரப்பட்டு திருவண்ணாமலை சென்ற இவரை, இறையருளால் எல்லாத் தத்துவ ஞானமும் தானாகச் சென்றடைந்தன என்றுதான் சொல்ல வேண்டும். தொன்றுதொட்டு வந்த நம் வேதாந்தப் பயிரை வளர்க்க, பாரத மாதா படைத்த சிந்தாந்தக் கருவூலமே 'ரமணன்' என்ற பெயர் கொண்டதோ!

இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய நூல்களில் மிகவும் புகழ் பெற்றது அக்ஷர மண மாலையாகும். 108 எளிய பாடல்களில் இவர் உன்னத பக்தி, வேதாந்தக் கருத்துகளை நமக்கு விருந்தாகப் படைத்து உள்ளார். இந்த மகத்தான பொக்கிஷத்தின் மூலம், பாரத தேசத்து சிந்தாந்தத்தை அறிந்து கொள்வதே இத்தொடரின் நோக்கம்.

★ ★ ★

இன்பமும் துன்பமும் இருமைகள் எனப்படும். இவை இரண்டும் மாறிமாறி நம்மை ஆட்கொள்கின்றன. புலன்களின் வசப்பட்டு இருக்கும் மானிடன் இன்ப-துன்ப மாயைகளில் சிக்கி விடுகிறான். இந்த நிலையை ரமணர் ஒரு உருவகமாக வடித்துத் தருகிறார்.

*ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தில் நீ இலையோ அருணாசலா*

*– அக்ஷரமணமாலை 11*

மிகவும் அருமையான வரிகள். புலன்கள் ஊடே வரும் இன்ப-துன்பங்களை கள்வர்கள் எனக் கூறுகிறார் பகவான். திருடர்கள் நம்முடைய சொத்தைத்தான் பறிப்பார்கள். இந்த ஐந்து புலன்களாக அமைந்த கள்வர்களோ நம்முடைய விலை மதிப்பற்ற சொத்தாகிய நிம்மதியையே திருட வருகிறார்கள். நாம் விழித்திருந்தால் கள்வர்கள் வர மாட்டார்கள். அதேபோல் வீட்டை நன்கு பூட்டி வைத்திருந்தால் அதைத் திறந்துகொண்டு வர இயலாது. இந்தப் "புலன்வழிக் கள்ளர்"களும் இத்தகையவரே. நம்முடைய ஆன்மா விழித்திருந்தால் நாம் இந்திரிய சுகங்களை நாட மாட்டோம். மனக் கட்டுப்பாடு எனும் பூட்டு இந்தச் சபலங்களைத் தடுக்கும்.

இந்தக் கள்வர்கள் புகும்போது "அகத்தில் நீ இலையோ?" என்று நம் சார்பாக பகவான் கேட்கிறார். இறை உணர்வு என்பது சத்வமயமான சக்தி. அது நம்முட் புகுந்து ஒளியோடு பிரகாசிக்கும்போது, திருடர்கள் உட்புக இயலாது. ஆனால் அந்த ஒளி இல்லாதபோது இருள் சூழ்ந்த உள்ளத்தில், புலன்கள் தம் இஷ்டத்திற்கு அலைகின்றன. தாற்காலிகமான இன்ப உணர்ச்சி கிடைத்தாலும் அது நிலைத்து நிற்பதில்லை. விரைவில் இன்பத்திற்குக் காரணமான பொருள் இல்லாத நிலையில் மனம் அதை மீண்டும் மீண்டும் நாடி துன்பத்தையே அடைகிறது. ஆனால்

பேரின்பத்தில் ஆழ்ந்த பக்தனுக்கு இந்த இருமைகள் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அவன் புலன்மூலம் ஊடுருவும் கள்ளர்களை அனுமதிப்பதில்லை. அவன் மனம் வைராக்கியம் என்ற பூட்டால் பாதுகாக்கப் பட்டுள்ளது.

புலன்களைத் தன்வசப்படுத்திய சான்றோர்களில் சிறந்தவர் நாவுக்கரசுப் பெருமான். சமணத்திலிருந்து சைவ நெறிக்குத் திரும்பிச்சென்ற இவர்பால் சமணர்கள் பெரும் கோபத்தை அடைந்தனர். இவர்மேல் பல குற்றச்சாட்டுகளை அரசன்பால் வைத்தனர். சமண சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்த மன்னனும் இவரைக் கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் அடைக்கும்படி கட்டளை இடுகிறான். அவ்வாறே இவரும் அடைக்கப்படுகிறார். நரக வேதனை என்பார்களே, அத்தகைய சுட்டெரிக்கும் சூழல், அங்கும் இப்பெருந்தகை இறைவனையே பார்க்கிறார்; அநுபவித்து மகிழ்கிறார். அவர் அனுபவம் ஒரு அழகிய பாடலாக வெளிவருகிறது.

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே.*

உடலைச் சுட்டெரிக்கும் அந்தச் சூழலில், இறைவனின் திருவடி நீழலையே அனுபவித்து உவந்தார் அந்த சைவச் சீமான். அங்கு அழகிய வீணா கானத்தைக் கேட்டார். காதினுள் இன்பத் தேன் பாய்ந்தது. மயக்கும் மாலை மதியத்தை அங்குக் கண்டார். கண்கள் மலர்ச்சி பெற்றன. தென்றல், அந்தச் சூழலிலும்கூட வீசியதால், உடல் குளுமை பெற்றது. இளவேனிற் காலத்து பழங்களின் சுவை மிகுந்த ரசம் நாவிற்கு இன்பமளித்தது. தாமரைத் தடாகங்கள் அப்பரின் மனக்கண்முன் விரிந்தன. ரீங்கரிக்கும்

வண்டினங்கள் அவைகளை மொய்த்தன. மலர்களின் நறுமணம் நாசிக்குப் பெரும் விருந்தளித்தன.

உலக மாந்தருக்கெல்லாம் துன்பம் விளைவிக்கும் சக்தி வாய்ந்த அந்தக் கொதிகலன், புலன்களை அடக்கிய வாசீகப் பெருந்தகையின் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்னும் ஐம்புலன்களுக்கும் மிகச் சிறந்த விருந்தாயிற்று. அந்த எளிய பக்தரிடம் 'ஐம்புலக் கள்வர்' தோற்றனர். ஆன்மிகம் வென்றது. அவர் அகத்தில் சிவசோதி அருள் மயமாகப் பிரகாசித்ததால் புலன்களுக்குத் துன்பம் அளிக்கும் அச்சூழலே அவருக்குப் பெரும் உவகை இறை நாட்டத்தின் மேற்படிகளில் சஞ்சரிக்கும் மகான்களுக்கே கைகூடும்.

'அகத்தில் நீ இலையோ?' என்ற வினா, ஆன்மிகத்தின் ஆரம்பப் படிகளில் உள்ள பக்தர் 'இறையருள் எனக்கு இல்லையே' என்ற ஏக்கத்தில் கேட்பதாகவும் கொள்ளலாம். இதற்குப் பக்தி நூலான விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் நல்லதொரு விளக்கம் காணலாம். 'அச்சுதன்' என்ற நாமத்திற்கு மூன்று விதமான பொருளைக் காண்கின்றனர் உரையாசிரியர்கள். தான் விழாதவன் – பக்தர்களைத் தங்கள் நிலையிலிருந்து விழாமல் காப்பவன் – அவர்தம் உள்ளத்திலிருந்து விழாமல் இருப்பவன் என்று மூன்று முறையில் பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வாறு இறைவன், தானே தன் உயர் குணத்தால் நம்மிடத்திருந்து விழாது இருக்கிறான் என்பது தெளிவாகிறது. இத்தகைய பரம்பொருள் என் உள்ளத்தில் இல்லாததால் அன்றோ இந்தக் கள்வர்கள் உட்புகுந்தனர்! "இறைவா நீ என்னுள்ளத்தில் நிரந்தரமாகக் குடிபுகுவாயாக நான் என்னுடைய தாபங்களிலிருந்து விடுபட்டு உன்னையே பற்றிக் கொள்ள அருள் செய்" என்பது பக்தி மார்க்கத்தில் பயணிக்கும் ஒவ்வொருவனுக்கும் இயல்பாக அமையும் ஒரு வேண்டுகோள்.

இறைவன் நாமம் உட்புகுந்த ஒரு எளிய பக்தனின் நிலையைக் காண்போம். லீலாசுகர் என்றும் கிருஷ்ண பக்தர், புலன்களைக் கண்ணன் பால் வைத்த ஒரு பெண்ணின் நிலையைக் கீழ்காணும் அழகிய ஸ்லோகத்தில் காட்டுகிறார்.

விக்ரேது காமா கில கோபகன்யா
முராரி பாதார்ப்பித சித்த வ்ருத்தி:
தத்யாதிகம் மோக விசாதவோசத்
கோவிந்த தாமோதர மாதவேதி.

அவள் ஒரு இடைப்பெண். பசுக்களைப் பராமரித்து அதன்மூலமாகக் கிடைக்கும் பால், தயிர் போன்ற பொருட்களை விற்பவள். வழக்கம்போல அவற்றைச் சுமந்து கொண்டு வியாபாரத்திற்கு வருகிறாள். ஆனால் அவள் மனமோ எல்லையில்லா விளையாட்டுடைய கண்ணன்பால் சென்றுவிட்டது. தன்னிலை இழக்கிறாள். மோர், தயிர், பால் என்று விற்க வேண்டியவள் "கோவிந்தா, தாமோதரா, மாதவா" என்று இறைவன் நாமத்தையே கூறுகிறாளாம்!

தொழில் செய்யும் இலட்சணத்தைப் பாருங்கள்! இத்தகைய மனப்பாங்கு கொண்டவளிடம் 'ஐம்புலக் கள்வர்கள்' என்ன செய்ய முடியும்? இறைவனை நமக்கு மிகவும் நெருக்கமானவராகக் காட்டுகின்ற இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல் 'கிருஷ்ண கானாம்ருதம்' எனப்படும். இதற்கு 'காதுகளுக்குப் பேரின்பம் அளிக்கும் கண்ணன் கதை' என்று பொருள் கொள்ளலாம்.

பரம்பொருளை ரமணர் அணுகும் முறையே வேத நூல்களிலும் காணப்படுகிறது. இதில் எளிமையும் அழகும் பரிமளிக்கிறது. பக்தி, வேதாந்தம் என்னும் இரண்டு பாதைகளையும் இணைக்கும் பாலமாக வேத மார்க்கம் செயல்படுகிறது. பிரம்மத்தை ஒவ்வொரு

வீட்டிலும் இருக்கும் வரவேற்கத்தக்க அதிதியாக ருக்வேதம் பார்க்கிறது.

*விசோ விசோ அதிதிம்*
*வாஜயந்த: புருப்ரியம் (8.74.2)*

அப் பரம்பொருள் மிகவும் விரும்பத்தக்கவனாக இருக்கிறான். நன்கு பரிச்சயமானவன். இதுவே பக்தனுக்கு வெகு நெருக்கத்தில் இறைவனைக் கொண்டு வரும் பாங்கு. அதர்வண வேதம், பக்தனுக்கும் இறைவனுக்கும் இடைய இருக்கும் உறவை கணவன்-மனைவி இடைய உள்ள பந்தமாக வருணிக்கிறது. “என்னுடைய இந்தத் துதிகள் எல்லாம் நின் புகழை நன்கு பாடின மனைவி அன்புக் கணவனை அணைப்பதுபோல அவை உன்னை ஆலிங்கனம் செய்கின்றன (10.17.3).” இந்த உறவானது என்றும் வலுப்பெற்று இருக்க பக்தன் விழைகிறான். இந்த மங்களகரமான உறவு சகோதரர்களுக்கு இடையே இருக்கும் பாசம் போன்றது (ருக். 10.23.7). இங்கு இந்த நட்புறவு ‘சக்யா’ என்று வருணிக்கப்படுகிறது. வேறு இடங்களில் இறைவன் ‘சகா’ என்று அழைக்கப்படுகிறான். இது சமமான நிலையில் உள்ள இருவர் பேசும் தொனியில் அமைந்துள்ளது. (ருக். 8.13.3).

வேதம் காணும் பக்தி பாவம் முதிர்ச்சி பெற்ற உறவாக உள்ளது. ஆண்டான்-அடிமை என்ற உறவைவிட நெருங்கிய ஒரு நட்புறவாக இந்த பந்தம் தோற்றமளிக்கிறது. கீழ்க்கண்ட ருக்வேத மந்திரம் நோக்கத்தக்கது.

*கிராமத்தில் உள்ளோர்க்கு கால் நடைகள்போல்*
*குதிரைகளுக்கு அதில் பயணிக்கும் வீரர்கள்போல்*
*கன்றுகளுக்கு வாத்சல்யம் மிக்க பசுவைப்போல்*
*மனைவிக்குக் கணவன்போல்*

*மேலுலகைத் தாங்கும் கருணை மிக்க உயர்ந்தோனே எங்கள் பக்கம் உன் பார்வையைச் செலுத்து."*

*– ருக் 10.149.4*

*அழகான வருணனை. இந்த உறவில் நெருக்கமும் பரஸ்பர வாத்சல்யமும் காணப்படுகிறது. "அகத்தில் நீ இலையோ?" என்ற ரமணரின் கேள்விக்கு விடை இங்கே காணலாம். வேதகால சமூகம் மிகவும் எளிமையாக இருந்தது. இறைவனிடத்து அவர்கள் மெய்யன்பு கொண்டு விளங்குகிறார்கள். அந்த உறவை எளிய உதாரணங்களைக் கொண்டு வியக்கும் பண்பு நம்மைக் கவருகிறது.*

*இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல கீழ்க்காணும் வரிகள் அமைகின்றன.*

*"த்வம் அஸ்மாகம், தவ ஸ்மசி" (ருக் 8.12.32)*

*பொருள்: "நீ எங்களுடையவன்; நாங்கள் உங்களுடையவர்கள்"*

*ஐந்தாயிரம் ஆண்டுகளுக்குமுன் இத்தகைய ஒரு தத்துவ விளக்கமா? வியப்பாக இருக்கிறது. இது பின்னர் வந்த சமயக் கருத்துகளுக்கு எல்லாம் ஒரு சிறந்த முன்னோடியாக இருக்கிறது. அத்வைத அக்னியாகப் பிரகாசித்த சங்கர பகவத்பாதரும் இதையே தத்துவமாகக் காட்டுகிறார். அன்பு வழியில் பயணித்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் இதையே பக்திப் பாதையாகக் காட்டுவர். எல்லாக் கோட்பாடுகளுக்கும் வேதம் காட்டிய ஒளிமயமான பாதையே வழிகாட்டி.*

*இத்தகைய பிரகாசமான வாழ்வு நெறி இன்று ஏன் காணக் கிடைக்கவில்லை? ஏன் புலன் வழிக் கள்வர்களின் சாகசம் ஓங்கி நிற்கிறது? ஓரளவு இதைக் காலத்தின் கோலமாகவும் பார்க்கலாம். யுகக் கணக்கில் பார்த்தால் மக்கள் கிருத யுகத்தில் மிகவும் மகிழ்ச்சியாக*

வாழ்ந்தார்கள். திரேதா யுகத்தில் இது குறைந்தது. துவாபர யுகத்தில் இன்னமும் வீழ்ச்சியடைந்தது. கலியுகத்தில் மக்கள் உள்ளத்தில் துன்பம் அதிகரித்திருப்பது கண்கூடு. இதற்குக் காரணம் புலன் வழிவரும் இன்ப நுகர்ச்சிக்கு உலக மாந்தர் அதிக இடம் கொடுத்திருப்பதே. அகவழி வரும் இன்பமே நிலைத்து இருக்கும் என்பதே வேதாந்தம் பறைசாற்றும் உண்மை.

கடந்த தலைமுறைகளைவிட நாம் வசதி மிக்க 21-ஆம் நூற்றாண்டில் வாழ்கின்றோம். ஆனால் நம்மில் பெரும்பாலோர் அதிக அளவு துக்கத்தையே அனுபவிக்கின்றோம். 'மானுடரின் இயல்பு நிலை ஆனந்த வடிவமானது' என்பது வேதாந்தம் கண்ட உண்மை. இது நாகரீக வளர்ச்சியின் வேகத்தில் சற்றே மாசுபட்டுப் போனதோ? இதைத்தான் ரமணரும் 'அகத்தில் நீ இலையோ' என்று குறிப்பிடுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த திருமங்கையாழ்வார் கூறுவது நோக்கத் தக்கது.

*சேமமே வேண்டி தீவினை பெருக்கி*
*தெரிவைமார் உருவமே மருவி*
*ஊமனார் கண்ட கனவிலும் பழுது ஆய்*
*ஒழிந்தன கழிந்த அந்நாட்கள்*

தீவினை பெருக்கிய புலன்வழிப் புகலாய் வாழ்ந்த நாட்கள் கழிந்தன. பின்னர் எவ்வாறு நல்வினைபால் புகுந்தார் இவர்?

*காமனார் தாதை, நம்முடைய அடிகள்*
*தம் அடைந்தார் மனத்து இருப்பார்*

ஒரு கருணைமிகுந்த பேரொளி அவருள் புகுந்தது. இவர் புலன்கள் வசத்திலிருநது மீள்கிறார். புலன்கள் இவர் வசமாயின எவ்வாறு?

*நாமம் நான் உய்ய நான் கண்டுகொண்டேன்*
*நாராயணா என்னும் நாமம்*

'நாமம்' என்னும் சொல்லும் 'நான்' என்னும் சொல்லும் இருமுறை - வேகத்துடன் வருகின்றன. உய்ய வழி கண்டு கொண்ட உவகையோ? நாராயண நாமத்தின் மகிமையோ?

மேற்சொன்ன அக்ஷர மண மாலையின் பாடல் மூலம் ஜீவாத்மா இந்த சம்சார சாகரத்தில் உழன்று படும் துயர் தெளிவாகக் காண்கிறது. "ஐம்புலக் கள்வர் என் உள்ளம் புகும்போது அங்கு நீ இல்லாது போனாய். இதற்குக் காரணம் நான் இல்லை; நீயேதான். உன் ஆணையாலேதான் நான் இப் பிறப்பு எடுத்தேன். நீயே எனக்குப் புகல்" என இறைஞ்சும் பாவம் காண்கிறோம்.

புலன் நுகர்ச்சியில் அது காட்டிய வழியில் போகாமல் தன் கடமையைச் செய்பவன், முயற்சிகளில் வெற்றி பெற்று இவ்வாழ்வைச் செவ்வனே நடத்துகிறான். ஆன்மிக வாழ்வினும் புலனடக்கம் அவனுக்குத் துணையாக நிற்கிறது. ஆனால் புலன்வழி சென்று தீவினை பயின்றோர் இகத்தையும் பரத்தையும் இழக்கின்றனர்.

ரமணப் பெருமான் இந்தப் புலனடக்கத்தையே வலியுறுத்துகிறார். இதுவே பேரின்பத்துக்கு வழி.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2015

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 26 | திங்கள் | இரவு 8.29 | 27 | செவ்வாய் | மாலை 6.12 |
| நவம்பர் | 25 | புதன் | காலை 6.42 | 26 | வியாழன் | அதிகாலை 4.19 |
| டிசம்பர் | 24 | வியாழன் | மாலை 6.28 | 25 | வெள்ளி | மாலை 5.19 |

# ரிக்வேதத்தில் கலைமகள் துதி

## சேலம் சேதுகுமரன்

கலைமகள் வழிபாடு என்பது தர்மத்தில் தொன்றுதொட்டே பயின்று வருவது. நமது கலாசாரம் மற்றும் நாகரிகத்தின் தொடக்கமே சரஸ்வதி நதி தீரத்தில்தான் துவங்கியது.

அம்பிதமே நதிதமே தேவிதமே சரஸ்வதி

'நீயே அன்னையருள் சிறந்தவள், நதிகளுக்குள் சிறந்தவள் இறைவியருள் சிறந்தவள்' என ரிக்வேதம் சரஸ்வதியின் புகழ்பாடுகிறது. வரும் திங்களில் நவராத்திரி விழா பாரதம் முழுதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை என்று பராசக்தியின் வடிவான முப்பெரும் தேவியரைக் கோலாகலத்துடன் வழிபடும் தருணம் இது.

ரிக்வேதத்தின் முக்கியமான பகுதியாய் ஒளிரும் 'வாக் சூக்தம்' 'வாக்' எனப்படும் சரஸ்வதியின் சிறப்பை அழகாகக் கூறுகிறது. உலகம் அனைத்தும் வாக்கின் வெளிப்பாடே என ரிஷி இதில் கூறுகிறார்.

"ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்று தமிழ் மறையும் கூறுகிறது.

இந்த வாக்ஸூக்தத்தின் பொருள் அற்புதமானது. "ரிக்வேதம் 10.125.01 இல் துவங்கி 10.125.08இல் முடிவுறும் இந்த ஸூக்தம் முழங்குவது:

10.125.01

அஹம் ருத்$_3$ரேபி$_4$: வஸுபி$_4$: சராமி

அஹம் ஆதி$_3$த்யை: உத விப்ஶ்வதே$_3$வை: ।

அஹம் மித்ராவருணா உபா$_4$ பி$_3$ப$_4$ர்மி

அஹம் இந்த்$_3$ராக்னீ அஹம் அப்ஶ்வினா உபா$_4$ ॥

"நான் (வாக்தேவி) ருத்ரர்களையும், வஸுக்களையும் ஆதித்யர்களையும் விஸ்வேதேவர்களையும் உடன் அழைத்து வருகிறேன். மித்ரனையும் மற்றும் வருணனையும், அக்கினியையும், இந்திரனையும் நானே தாங்குகிறேன். அஸ்வினி தேவர்களும் என்னுடைய துணையாட்களே. நானே பரமாத்மா எனப்படும் வாக், முதல் தோற்றம்.

*10.125.02*

*அஹம் ஸோமம் ஆஹநஸம் பி$_3$ப$_4$ர்மி*
*அஹம் த்வஷ்டாரம் உத பூஷணம் ப$_4$கம் ।*
*அஹம் த$_3$தா$_4$மி த்$_3$ரவிணம் ஹவிஷ்மதே*
*சுப்ராப்யே யஜமானாய ஸுன்வதே ॥*

அமரர்களின் எதிரிகளை அழிக்கும் ஸோமனுக்கும், த்வஷ்டாவிற்கும், பூஷனுக்கும் பகனுக்கும் நானே வழிவகுக்கிறேன். யாகங்களில் அவியுணவை அளித்து, எனது பாதுகாப்பினை வேண்டி கிரியை புரியும் அனைவருக்கும் நான் வேண்டுவார் வேண்டுவனவற்றை அளிக்கிறேன்.

*10.125.03*

*அஹம் ராஷ்ட்ரீ ஸம்-க$_3$மனீ வஸூனாம்*
*சிகிதுஷி ப்ரத$_2$மா யக்ஞியானாம் ।*
*தாம் மா தே$_3$வா: வி-அத$_3$து:*
*புருத்ரா பூ$_4$ரிஸ்தா$_2$த்ராம் பு$_4$ரி-ஆவேஶயந்தீம் ॥*

நானே அனைத்திற்கும் தலைவி, ஐஸ்வர்யங்களின் அதிபதி, பரமாத்மாவை உள்ளபடி அறிபவள், அனைத்து வழிபாடுகளையும் ஏற்பவள், அனைத்துக் கடவுளர்களும் பல்வேறு வடிவங்களில், பல்வேறு நிலைகளிலும், தோற்றங்களிலும் என்னை வழிபடுகின்றனர்.

*10.125.04*

*மயா ஸ: அன்னம் அத்தி ய:*
*வி-பஷ்யதி ய: ஈம் ஶ்ருணோதி உக்தம் ।*

*அ-மன்வத: மாம் தே உப-க்ஷியந்தி*
*ஶ்ருதி$_4$ ஶ்ருத ஶ்ரத்$_3$தி$_4$வம் தே வதா$_3$மி ॥*

யார் உணவை உண்கின்றானோ, அவன் என் மூலமாகவே உண்கிறான். மூச்சினை சுவாசிக்கின்றவனும், ஒலியினைக் கேட்பவனும் என் மூலமே இவற்றைச் செய்கிறான். என்னை அறியாதவர்கள் அழிபடுகின்றனர். கேட்கும் திறன் படைத்தோர் அனைவரும் இதனைக் கேளுங்கள். எதைக் கேட்டால் நன்மை சித்திக்குமோ அதை நான் எடுத்துரைக்கிறேன்.

*10.125.05*

*அஹம் ஏவ ஸ்வயம் இத$_3$ம் வதா$_3$மி*
*ஜுஷ்டம் தே$_3$வேபி$_4$: உத மானுஷேபி$_4$: ।*
*யம் காமயே தம் தம் உக்$_3$ரம் க்ருணோமி தம்*
*ப்$_3$ரஹ்மாணம் தம் ரிஷிம் தம் ஸுமேதா$_4$ம் ॥*

தேவர்களாலும், மாமனிதர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பேருண்மையை உங்கட்கு உரைக்கிறேன். நான் யாரைத் தேர்ந்தெடுக்கிறேனோ, அவனை நான் ஒரு ப்ரம்மா ஆகவோ, ரிஷியாகவோ அன்றி ஒரு ஞானியாகவோ பரிணாமம் அடையச் செய்கிறேன்.

*10.125.06*

*அஹம் ருத்$_2$ராய தனு: ஆ தனோமி*
*ப்$_3$ரஹ்ம-த்$_3$விஷே ஶரவே ஹந்தவை உ ।*
*அஹம் ஜனாய ஸமத$_3$ம் க்ருணோமி*
*அஹம் த்$_3$யாவா ப்ருதி$_2$வி ஆ விவேஷ ॥*

நானே ருத்ரனின் வில்லினை (அவன் போரிடும் போது) வளைக்கிறேன். நல்லோர்களைத் தீயோர் அழிக்க வரும்போது அவர்களுடன் நான் போரிட்டு அழிக்கிறேன். நானே வானிலும் பூமியிலும் பரந்து உள்ளேன்.



*10.125.07*

*அஹம் ஸுவே பிதரம் அஸ்ய மூர்த$_4$ன்*
*மம் யோனி: அப்ஸு அந்த: ஸமுத்$_3$ரே ।*
*தத: வி-திஷ்டே$_2$ பு$_4$வனா அனு விஶ்வா உத*
*அமூம் த்$_3$யாம் வர்ஷ்மணா உப ஸ்புருஶாமி ॥*

அந்தப் பரமாத்மாவின் புருவத்தினின்றும் (கண்கள்) அருளினைக் கொணர்ந்து அனைத்திற்கும் அளிக்கிறேன். ஜலத்தின் இடையே தோன்றிய நான் அனைத்துப் படைப்புகளிலும் ஊடுருவிப் பரந்து நிற்கிறேன். பரமாகாசமும் என் தொடுதலினால் உயிர்க்கிறது.

*10.125.08*

*அஹம் ஏவ வாத: இவ ப்ர-வாமி*
*ஆரபா$_4$மாணா பு$_4$வனானி விஶ்வா ।*
*பர: திவா பர: ஏனா ப்ருதி$_2$வ்யா*
*ஏதாவதீ மஹினா ஸம் ப$_3$பூ$_4$வ ॥*

என்னுடைய மூச்சுக் காற்றின் மூலமே படைப்புகள் அனைத்தும் உருவமும் உயிரும் பெறுகின்றன. அண்டத்திற்கு அப்பாலும் என் மகிமை பரவி உள்ளது.

# அமெரிக்காவில் ஓர் ஆன்மீக அன்னை

இந்த ஆண்டு மே பதினெட்டாம் நாளன்று, ஓர் உயர்ந்த ஆத்மா, நியூயார்க்கில் உள்ள டோனாவான்டா பகுதியில் பரத்தில் கரைந்தது. அமெரிக்கக் கண்டத்தில் அருணாசல ஆஸ்ரமங்களை ஏற்படுத்திப் பகவானின் உபதேசங்களைப் பரப்பும் முயற்சிகளுக்கு அடிக்கல்லாக அமைந்துள்ள டென்னிஸ் ஹார்டலின் அன்னை டோரதி ஹார்டல்தான் அவர். தொண்ணூற்று ஐந்துவரை அமைதிப் பெருவாழ்வு வாழ்ந்த திருமதி. டோரதி ஹார்டல் அமெரிக்காவில் 1920-30களில் தாக்கிய பெரும் பொருளாதாரச் சிக்கலின்போது, அவரும் அவரது நான்கு உடன்பிறந்தோரும் அயர்லாந்தில் பிறந்த அவரது அன்னையரால் பல சிரமங்களிடையே வளர்க்கப்பட்டனர. இந்தப் பெரும் சிக்கல் அவரது உள்ளத்தை உறுதியாக்கி, மனப் பாங்கை விரிவுபடுத்தியது. பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் அவர் தம் கல்வி பயில்வதை நிறுத்தி, குடும்பச் சூழ்நிலைக்காக நியூயார்க் நகரில் வேலைக்காகச் சேர்ந்தார். அங்கேதான் அவர் போர்க்களத்திற்குச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த தம் எதிர்காலக் கணவரைச் சந்தித்தார்.

1972ஆம் ஆண்டு கானடாவில் நோவாஸ்கோஷியாவில் அருணாசல ஆஸ்ரமம் ஆரம்பித்த அவ்வாண்டிலேயே அங்குச் சென்ற டோரதி அம்மையார், அடுத்த நாற்பது ஆண்டுகள் இடைவிடாது நோவாஸ்கோஷியா ஆஸ்ரமத்திற்கும், நியூயார்க் ஆஸ்ரமத்திற்கும் விஜயம் செய்வதை ஆண்டுதோறும் ஒரு தீர்த்த யாத்திரை போலவே செய்துவந்தார். அவரை அங்கே சந்தித்த எழில்மிகு தருணங்களை

பல அன்பர்கள் நினைவுகூறுகின்றனர். ஒவ்வொரு கோடைக்காலத்திலும் தமது வேலையினின்றும் விடுப்பு பெற்று நோவாஸ்கோஷியா சென்று அங்கு செப்டம்பர்வரை இருப்பார். அவருக்கு வயது முதிர்ந்த போதும்கூட, அவரது மகன்களான டென்னில் அல்லது ஜேம்ஸ் கார் ஓட்ட நோவா ஸ்கோஷியா வரை தொலைதூரப் பயணம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அருணாசல ஆஸ்ரமத்தில் அவர் இருந்த ஒவ்வொரு கணமும், அங்கிருந்த சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவரும் அவரது அன்பான ஆத்மிகக் கதிரியக்கத்தை உணர்ந்தர். ஆஸ்ரமத்தில் சமைப்பது, சுத்தப்படுத்துவது, அழகுபடுத்துவது ஆகிய அனைத்து வேலைகளிலும் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கத்தோலிக்க சமயத்தினைத் தீவிரமாகப் பின்பற்றுபவர் ஆக இருந்த போதிலும், ஆஸ்ரமத்தின் ஆன்மிகச் சாதனைகள் அனைத்திலும் ஆர்வத்துடன் ஈடுபடுவார். ஒரே ஒரு பரம்பொருளின் பல்வேறு வடிவங்களே பல்வேறு சமயங்கள்; அனைத்து அன்பர் இதயத்திலும் இறைவன் உறைகின்றான் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர் அவர். 14 ஆண்டுகள் ஒரே இல்லத்தில் வாழ்ந்து வந்த அவர், எப்போதும் மகிழ்ச்சியுடன் இருந்தவர். 2013ஆம் ஆண்டில் அடுத்து அடுத்து அவரது கணவரும் மூத்த மகனும் மறைந்தனர். அவரது உடல் வலிமையும் குறையத் தொடங்கியது. அருணாசல ஆஸ்ரமத்திற்கு, வரும் பலரும் அவரை அவர்தம் இல்லத்திற்குச் சென்று காண்பது வழக்கம்.

அவர் மறைந்த சமயம் ஏராளமான ஆன்மிக அன்பர்கள் இல்லம் சென்று அனுதாபம் தெரிவித்தனர். நியூயார்க் தோனவாண்டா பகுதியில் உள்ள அஸிஸியின் தூய ஃப்ரான்சிஸ் தேவாலயத்தில் நடந்த அடக்கச் சடங்கின்மீது டென்னிஸ் நிகழ்த்திய உரையின் பகுதி:

"கருவுற்ற காலத்திலிருந்து ஓர் அன்னையின் மனம் முழுவதும் தனது குழந்தை மேலேயே முற்றிலும் ஈடுபட்டுள்ளது. தனது வாழ்நாட்களின் செழுமை மிகுந்த ஆண்டுகளை தனது குழந்தையின் நலத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவுமே அர்ப்பணிக்கிறாள். அவள் இடையறாத தியாகம் எதையுமே எதிர்பார்த்துச் செய்யப் படுவதல்ல. அன்பிற்காகவே பொழியப்படும் தன்னலமற்ற அன்பே அது. அகிலம் முழுவதும் வியாபித்துள்ள இறை அன்பிற்கு மிக நெருங்கிய ஒன்றை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமெனில், ஓர் அன்னையின் இதயத்திலிருந்து ஊற்றெடுக்கும் அன்னையின் அன்புதான். அதுவே இறையன்பின் பிரதிபலிப்பு.

அதனால்தான் விவிலியத்தின் பத்துக் கட்டளையில் ஒன்றாக அன்னையை அன்புசெய் என விதிக்கப் பட்டுள்ளது. உலகில் உள்ள எல்லாச் சமயங்களின் மறைநூல்களிலும் அன்னையை மதிப்பது உயர்வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நூறுகோடி இந்து சமயத்தினரின் இதயத்தே ஒலிக்கும்

*மாத்ருதே$_3$வோ ப$_4$வ, பித்ருதே$_3$வோ ப$_4$வ,*
*ஆசார்ய தே$_3$வோ ப$_4$வ அதிதி தே$_3$வோ ப$_4$வ*
*"உன்னுடைய அன்னையே உனது கடவுளாகட்டும்;*
*உன்னுடைய தந்தையே உனது கடவுளாகட்டும்;*
*உனது ஆசானே உனது கடவுளாகட்டும்;*
*உனது விருந்தினரே உனது கடவுளாகட்டும்"*

இந்த மந்திரத்தில் பிரதான ஸ்தானம் அன்னைக்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மந்திரத்தில் கூறப்பட்டுள்ள கருத்தினை நான் பல்லாண்டுகளாகப் பயின்று வந்ததில் அதன் கருத்து எனது சுபாவத்திலேயே ஒன்றிவிட்டது. அன்னையின் அருளாலேயே நான் இங்குத் தோன்றினேன். எனவே எனக்கு தந்தை, ஆசான், அதிதி இவர்கள்

அனைவரையும் விட உயர்ந்த இடத்தை வகிக்கிறார் என்பது எளிதாகவே புரிந்தது.

95ஆண்டுவரை வாழ்ந்த எமது அன்னையின் வாழ்வின் சிறப்பு வாய்ந்த தருணங்களில் பங்கு பெற்ற எனது சகோதர சகோதரிகள், பேரன், பேத்திகள் அனைவருமே அந்த இனிமையான தருணங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து மகிழ்கிறோம். உங்கள் அனைவருக்கும் சிறப்பு வாய்ந்த நினைவு நிதியங்கள் உள்ளன; எனக்கும் இந்தச் சிறப்பு நினைவுகள் உள்ளன.

நாங்கள் சிறார்களாக இருந்தபோது, அவர் எங்களைச் சீரான, குறுகிய பாதையில் வழிநடத்த இடையறாது உழைத்தார். நாங்களும் தக்க பருவம் அடைந்தவுடன் எங்களை எங்கள் போக்கிலேயே சுதந்திரமாகச் செல்ல விட்டார்.

நாங்கள் எங்கள் கால்களிலேயே நிற்கும் சக்தி வாய்ந்தவர்களாக உருவாக வேண்டும் என்பதே அவரது விருப்பம். நாங்கள் வாழ்வில் எத்துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற உரையாடல் எழுந்த போதெல்லாம், "எதைத் தேர்ந்து எடுத்தால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று தோன்றுகிறதோ அதையே தேர்ந்தெடுங்கள்" என்பதே அவர் அறிவுரை. நாங்கள் எதைத் தேர்ந்தெடுத்தபோதும் அதில் நாங்கள் தீவிரமாக ஈடுபடும்படி அறிவுரைகூறி எங்கட்கு பல வழிகளிலும் உதவி செய்தார். "இது சரி! இது தவறு" என்றெல்லாம் கருத்துக் கூறிக்கொண்டு இராமல், எப்போதும் அன்பான ஊக்கச் சொற்களை வழங்கி வந்தார் அவர். அவர் அறைக்கு நாங்கள் சென்றபோதெல்லாம் அவரது பேரன்பு எங்களை அரவணைக்கும். மலர்ந்த முகத்துடனும், ஒளிரும் புன்னகையுடன், அவரை நாங்கள் காணும் போதெல்லாம், எத்தகைய கால இடைவெளி



**ஆச்ரம தலைவர் திரு. V.S. ரமணனுடன் டோரதி ஹார்டல்**

இருப்பினும் மாறாத அன்புடன் வரவேற்பார். ஓராண்டு இடைவெளி அல்ல ஒரு மணி நேர இடைவெளியில் நாங்கள் திரும்பிச் சென்றாலும், அதே பெருமகிழ்வுடன் மீண்டும் வரவேற்பார். அவருக்கு, நாங்கள் ஒரு மிகச் சிறிய சேவை செய்தால்கூட, அவர் காட்டும் பெரும் நன்றி உணர்வை நாங்கள் மறக்கவே முடியாது. இதுவே மறக்கமுடியாத என் அன்னையின் ஸ்வரூபம். ஒரு பெருங்கவியின் வாக்கு "இறப்பு என்பது ஒரு தீபத்தை அணைப்பது போன்றதல்ல. வைகறை வந்துவிட்டதால், விளக்கை அணைப்பது போன்றதாகும் அது"

அந்தத் திங்கள் காலையில், அவரது சிறார்களான நாங்கள் மூவரும் அவர் கரத்தைப் பற்றியிருக்க, அவர் ஆழ்ந்த மௌனத்துடன் அந்த வைகறை ஒளியில் பாதம் பதித்தார். இதனால் நாங்கள் ஆசிர்வதிக்கப்பட்டதாக உணர்ந்து, பெரும் நன்றி உணர்வுடன் மகிழ்கிறோம்.

# திருமதி. வேதாம்பாள் நாராயணன்

*அன்பொடுஉன் நாமங்கேள் அன்பர்தம் அன்பருக்கு*
*அன்பனா யிடவருள் அருணாசலா*

*– ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷிகள்*

என்னிடத்தே மனதை வைத்து, என்னிடத்து புத்தியைச் செலுத்துக. பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமில்லை என்கிறார் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில். இதற்கு இணங்க ஸ்ரீ பகவான் ஸ்ரீ ரமணரிடம் உள்ளத்தை வைத்து அவரிடமே வசித்திருந்தவர் மதுரை திருமதி வேதாம்பாள் நாராயணன் . 1950-ஆம் வருடம் ஒரு நாள் வயல்வெளி வழியில் தனியாக நடந்து வந்து கொண்டிருந்தார். திடீரென வானத்தில் ஒரு காட்சி. ஸ்ரீ பகவானின் திருமுக தரிசனம் ஒளிமயமாய், பிரம்மாண்டமாய் அவருக்குக் கிட்டியது. அவ்வருட் காட்சியில் தன்னையே மறந்து லயித்துவிட்டார். பின்னர் மறுநாள் தான் தெரிந்தது அவருக்குக் காட்சி கிட்டிய அதே நேரத்தில் ஸ்ரீ பகவான் ரமணர் திருவண்ணாமலையில் தேகத்தை விட்டார் என்பது. அதிலிருந்தே அவருக்கு ஸ்ரீ பகவான் அருட்காட்சி எப்போதும் கிட்டிக்கொண்டே இருந்தது.

1927-ஆம் ஆண்டு மாசி மாதம் பகவானின் புண்ணிய நட்சத்திரமாம் புனர்வசு அன்று வேதாரண்யத்தில் திரு.வெங்கட்ராமன் - லெட்சுமி தம்பதியினருக்கு மூத்த மகளாகப் பிறந்தவர்.

தகப்பனார் வேதாரண்யம் திருக்கோவிலில் பணிபுரிந்தார். சிறுமியாக இருக்கும் காலத்திலிருந்தே நாள் தவறாமல் திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருவது வழக்கம். தொடக்கக் கல்வி அதே ஊரிலே பயின்றார். பக்திப்பாடல்கள் சிறுவயதிலிருந்தே உருக்கமுடன் பாடிக் கேட்போரை வியக்க வைப்பார்.

*1945-ஆம் ஆண்டு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வந்த திரு. நாராயண ஐயர் என்பவரை கரம் பிடித்தார். வேதாம்பாள் அவர்களின் மாமியார் திருமதி. ஜானகியம்மாள் திருச்சுழியைச் சேர்ந்தவர். அவர் மூலமாக ஸ்ரீ பகவானைப் பற்றி அறிந்து கொண்டார். திருச்சுழி ஜானகியம்மாள் பகவானின் தாயார் அழகம்மாள் மூலமாக நிறைய வேதாந்த பாடல்களை அறிந்தவர். அவர் பகவானுக்கு மிகவும் நெருங்கிய உறவு. நாராயண ஐயர் பகவான் அவதரித்த இல்லத்திலேயே பிறந்தவர் ஆவார்.*

*மதுரைக்கு 1967-ஆம் ஆண்டு குடும்பத்துடன் குடிபெயர்ந்தார்.*

*முதன் முதலில் அவர் ஸ்ரீ மீனாட்சியம்மன் திருக்கோவிலுக்குச் சென்றார். திருக்கோவில் மூலஸ்தானத்தில் அவருக்கு ஒரே ஆச்சரியம். அங்குச் சொக்கநாதப் பெருமான் வீற்றிருப்பதற்கு பதிலாக சாட்சாத் பகவானே அமர்ந்திருந்தார். புன்னகை பூத்து பத்மாசனத்தில் அமர்ந்து திருகாட்சி அருளியதைக் கண்டு திகைத்துப் போனார்.*

*மறுபடியும் வெளியில் வந்து கண்களைக் கசக்கிக் கொண்டு உள்ளே சென்றுபார்த்தால் ரமண தரிசனமே கட்டிற்று மெய்மறந்து தரிசனம் புரிந்துவிட்டுக் கோவில் எதிரில் உள்ள ஸ்ரீ ரமண மந்திரத்திற்கு முதல் முறையாக வந்தார். ஆனால் அங்கு பகவானின் திருவுருவ படத்தில் சுந்தரேஸ்வரரின் திருக்கோலம் அவருக்குப் புலப்பட்டது. இது ஸ்ரீ பகவானே அனைத்துமாய் விளங்கும் சிவசொரூபம் என்று உறுதிப்பாட்டை அவருக்குள் ஏற்படுத்தியது.*

*தொடக்கக் காலத்தில் ஸ்ரீ பகவான் திருவுருவத்தை நேரிலோ அல்லது படங்களிலோ கூட கண்டது இல்லை. பலமுறை அவருக்குக் கிட்டிய திருத்தோற்றம் பின்பு ஒரு முறை பகவானின் படத்தினை உறவினர்*

ஒருவர் காட்டிய போதுதான் தான் கண்டது ரமண பகவானின் திருவுருவம் என்று உணர்ந்து அதிசயித்தார்.

1967 முதல் 1985-ம் ஆண்டு வரை தெய்வநெறிக்கழகத்தில் முழு ஈடுபாட்டுடன் தொடர்பு கொண்டு சத்ஸங்கத்தில் கலந்து கொண்டார். 1987-ல் மதுரை ஸ்ரீ ரமண மந்திரம் புதுப்பித்த காலம்தொட்டு அவர் வேறெங்குமே ஏன்? மீனாக்ஷி திருக்கோவிலுக்குக் கூட சென்றதில்லை.

தினசரி ஸ்ரீ பகவானுக்கு பிரசாதம் செய்து எடுத்துக் கொண்டு காலை 7 மணிக்கு வந்து அருணாசல ஸ்துதி பஞ்சகம் மற்றும் பகவான் பாடல்களை உள்ளம் உருகி பாடுவார். அவருடைய கம்பீரமான அதே நேரத்தில் மனதைக் கவரும் பாடல்கள் கேட்போரைக் கட்டிப்போட்டுவிடும். தமது இறுதி காலத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்த போது கூட ஒரு நாள் அவர் பாடிய பாராயணயத்தைக் கேட்டு செவிலியர்களும் மருத்துவர்களும் அருகே இருந்தவர்களும் கூடி வியப்புடன் நின்று கேட்டனர்.

வாரந்தோறும் நடைபெறும் வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்தில் தவறாது கலந்துகொள்வார்.

ஸ்ரீ ரமண பக்தர்களுக்கெல்லாம் தாய்போல் விளங்கியவர். சிலர் அவர்களது குடும்பப் பிரச்சனைகளைத் தனியே கூறும் போது மிகுந்த ஆறுதல் தருவார். ஸ்ரீ ரமண பக்தர்களைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு அளிப்பதில் அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி விசேஷ காலங்களில் வீட்டில் பக்ஷணங்கள் செய்து அன்பர்களுக்குத் தாயன்புடன் வழங்குவார். அவருடைய கைப்பாங்கு சமையலில் விளங்கும். அவர் சமையலின் ருசியே அலாதிதான்

வெளித்தோற்றத்தில் அவர் மிகச் சிறந்த பக்தையாக விளங்கினார். ஆனால் அவருடன் நெருங்கிப் பழகும்

பக்தர்களுக்குத் தான் தெரியும் அவர் எவ்வளவு பெரிய சாதனை புரிந்தவர் என்று சத்குருவாம் ரமணபகவான் திருவடியிலேயே அவர் லயித்திருந்தார்.

உபச்சாரத்திற்குக் கூட உயர்ந்த ஆன்மத் தத்துவத்திலிருந்து கீழ் இறங்க மாட்டார். 'பகவானது அருள் இன்னும் கிடைக்கவில்லையே என்று சொல்லும்போது' 'அது எப்போதும் நமக்குள் இருந்துக்கிட்டுதான் இருக்கு' என்று பளிச்சென பதிலிறுப்பார்.

ரமண மந்திரத்தின் பவித்திரமான தன்மையினை 'ஸ்ரீ ரமண மந்திரத்தின் மாண்பு' என்று சிறு நூல் வடிவில் எழுதியுள்ளார். பகவானின் அளப்பரிய கருணையினைப் பல ஏடுகளில் எழுதியிருப்பது அவருடைய அனுபவத்திற்குச் சான்று.

ரமண பக்தர்களுக்கு முன்னோடியாக விளங்கிய அவர்தம் வாழ்வியல், ஓர் அற்புத அனுபவமாய் மிகச் சிறந்த கவிதையைப் போல் விளங்கிற்று எனலாம்.

குற்றம்முற்(று) அறுத்து எனைக் குணமாய்ப் பணித்(து) ஆள்
குருவுரு வாயொளிர் அருணாசலா

'நாம் ஆன்ம சொரூபமாய்தான் இருக்கின்றோம்' என்ற பகவானின் அருளுபதேசத்திற்கு நிதர்சனமாக விளங்கினார். தூய உள்ளமும் சதாசர்வகாலமும் பகவத் காட்சியிலும், பிரேமை பக்தியிலும் விளங்கிய உத்தம பக்தை வேதாம்பாள் 2006-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மேற்படி அக்ஷரமணமாலைப் பாடலைப் பாராயணம் செய்யும் பொழுது ஸ்ரீ பகவானின் பாதார விந்தத்தில் ஒன்று கலந்தார்.

எண் உரு யாவையும் இறை உருவாம் என எண்ணி நல்பூசனை ஆற்றி மறைந்தது. அவருடைய ஆன்ம பரிபாகத்தை நமக்கு உணர்த்தி நிற்கின்றது.



திருமதி. வேதாம்பாள் நாராயணன்

ஸ்ரீ காவ்ய கண்ட முனிவர் உடலை விட்ட செய்தியை பகவானிடம் கூறியபோது 'இனிமேல் இப்படிப்பட்ட மனிதரை இனி எங்கே பார்க்கப் போகிறோம்' என்றார். இது திருமதி வேதாம்பாள் நாராயணன் அவர்களுக்கும் பொருந்தும்.

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### அருணை விஜய தின விழா

*பகவான் 1896ஆம் ஆண்டு மதுரையை விட்டுக் கிளம்பி அருணையடைந்த தினமான செப்டம்பர் 1, ரமண அன்பர்களால் அருணை விஜய தினம் என்று ஒவ்வோராண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.*

*இவ்வாண்டும் செப்டம்பர் 1 அன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அருணை விஜய தினம் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மதுரையிலிருந்து சுமார் 60 அன்பர்கள் பகவான் வந்த வழியே திருவண்ணாமலை வந்து ஸ்ரீ ரமணாச்ரமத்தில் தங்கினர். சிறப்புப் பாராயணங்களும், பூஜையும், சிறப்பு அபிஷேகமும் ரமணேஸ்வர மகா லிங்கத்திற்கு செய்விக்கப்பெற்றது.*

*அன்று ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயிலில், சிறப்பு அபிஷேகம் செய்யப்பெற்றது.*



*மதுரை ரமண மந்திரம் அன்பர்கள்*

## சம்வத்ஸர அபிஷேகம்

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில், ஸ்ரீ ரமணேஸ்வர, மாத்ருபூதேஸ்வர ஆலயங்களின் மஹா கும்பாபிஷேக தினத்தின் இரண்டாம் ஆண்டு விழா, செப்டம்பர் 2ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. கணபதி பூஜையில் தொடங்கி, புண்யாவசனம், கலச ஸ்தாபனம், மஹன்யாசம், ஷோடஷ உபசார பூஜை, ஸ்ரீ ருத்ர ஜபம், ஹோம அக்னியைப் பிரதிஷ்டை செய்தல், கணபதி ஹோமம், பகவான் மூலமந்த்ர ஹோமம், துர்கா ஸ்ரீசூக்த ஹோமம், நவக்ரஹ பூஜை, ஸ்ரீருத்ர ஹோமம், பரிவார ஹோமம் இவையனைத்தும் வேதமுறைப்படி சிறப்பாக நடைபெற்றன. பின்னர் பூர்ணாஹுதியும், தீபாராதனையும் செய்யப்பெற்றன. அதைத் தொடர்ந்து மாத்ருபூதேஸ்வரர் ஆலயம், பகவான் சந்நிதி மற்றும் பரிவார தேவதைகளின் கோபுர கலசங்களில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. மஹா தீபாராதனையுடன் இந்த அபிஷேக நிகழ்ச்சிகள் முடிவுற்றன.*



## முருகனார் ஆராதனை

*அருணாசல ரமணரின் அத்யந்த அன்பரும், 'பகவானது நிழல்', 'நந்தி' என்று அன்போடு அழைக்கப்படும் முகவைக்கண்ண முருகனாரின் ஆராதனை விழா இவ்வாண்டு*

*12-9-2015 சனிக்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. முருகனார் இயற்றிய ஸ்ரீ ரமண சந்நிதி முறைத் தொகுப்பிலிருந்து (திருவாசக தலைப்பின்படி) 50-க்கும் மேற்பட்ட அன்பர்களால் இரண்டு மணி நேரம் முருகனார் சமாதி சந்நிதி முன்பு பாராயணம் செய்யப்பட்டது.*



*சென்னை சூளைமேடு ரமண சச்சிதானந்த சபை பக்தர்கள் 20 பேர் வேதகோஷத்துடன் முருகனார் சமாதி லிங்கத்திற்கு சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்தனர்.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

முருகனார் 42ஆவது ஆராதனை விழா

*12-9-2015 சனிக்கிழமையன்று சுவாமி ஸ்ரீமத் பரானந்த மஹராஜ், தாயுமானவர் தபோவனம் அவர்கள் முன்னிலையில் காலை 10 மணி முதல் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம், ஸ்ரீரமண சந்நிதி முறை பாராயணம் மற்றும் சிறப்புப் பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. சுமார் 200-*

*க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இவ்விழாவில் மதுரை ரமண மந்திரம் அன்பர்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கது. அனைவருக்கும் பகல் 1.00 மணிக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.*

## ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

### கல்வி உதவித்தொகை வழங்குவிழா

*19-7-2015 ஞாயிறன்று ஒவ்வொரு ஆண்டும்போல் இவ்வாண்டும் ஏழை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கும் விழா நடைபெற்றது. சுமார் 70 மாணவர்களுக்கு ரூ. 80,000 பொருளுதவி அளிக்கப்பட்டது. விழாவிற்கு நமது ஆசிரியர் திரு. எஸ். ராம் மோஹன் அவர்கள் தலைமை தாங்கினார்.*

### அருணை விஜய தின விழா

*அன்று சென்னை ஸ்ரீ ரமண கேந்திரத்தில் பகவானின் அருணை விஜயத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மசாரிணி சைதன்யா அவர்கள் தலைமை சொற்பொழிவாற்ற பின்னர் திரு. காமேஷ்வர் மற்றும் ஆசிரியர் ராம் மோஹன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.*

## அருணை விஜய தின விழா, ரமணாலயம், குரோம்பேட்டை

*செப்டம்பர் 1ஆம் தேதி மாலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை சிறப்புப் பாராயணம் மற்றும் அன்பர்களின் அனுபவ பரிமாற்றங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

*அதைத் தொடர்ந்து இசைக்கவி ரமணன் பகவானும் திருக்குறளும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை**, ரமணாலயம் | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |
| **ஓசூர்** அசோக்குமார் | .......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



Pranams from

# SUNDARI SILKS

New No. 38, North Usman Road,
T.Nagar, Chennai 600 017
Ph: 044-28149999

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

